விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 06 வெள்ளிக்கிழமை (20.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 032

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இனப்பிரச்சினையை தீர்க்க செனற் சபை வருகிறது!

### அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு) இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் செனற் சபை ஒன்று அமைக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கும், மத்திய அரசுக்கும் இடையில் நிர்வாக இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த செனற் சபை அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

அத்துடன் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளை செனற் சபையில் உள்வாங்குவதன் மூலம் ஜனநாயகத்தை பேணிப் பாதுகாக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நாடு தொடர்பான அனைத்து தீர்மானங்களும் எடுக்கப்படும் வகையில் இந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா திரும்பினார் அமைச்சர் கிருஸ்ணா




(கொழும்பு)

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த இந்திய வெளி விவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா நேற்று இந்தியா திரும்பினார்.

நேற்றுப் பிற்பகல் 1.35 மணியளவில் விசேட விமானத்தின் மூலம் அவர் இந்தியா பயணமானார்.

இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர், வெளிவிவகார அமை ச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், (20ஆம் பக்கம் பார்க்க)

## அப்துல் கலாம் இன்று இலங்கை வருகை



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் தலைசிறந்த விஞ்ஞானியுமான அப்துல் கலாம் இன்று இலங்கைக்கு வருகிறார்.

இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## காணிச் சுற்றுநிருபம் வாபஸ் பெறப்பட்டது

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு மற்றும் விசேட அபிவிருத்தி திட்டங்கள் தவிர ஏனைய நோக்கங்களுக்கு காணிகள் விநியோகிப்பதை தற்காலிகமாக தடை செய்வதற்கான சர்ச்சைக்குரிய காணிச் சுற்று நிருபத்தை வாபஸ் பெறுவதற்கு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை சட்டமா அதிபரின் பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் திருமதி முருது பெர்ணான்டோ நேற்று வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அறிவித்தார். இந்த சுற்று நிருபத்தை தொடர்ந்து விடுக்கப்பட்ட பொது அறிவித்தல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் தமது காணிகளை நவம்பர் மாதம் 20திகதி 2011-ம் ஆண்டுக்குமுன்னர்பதியவேண்டுமெனகூறியது.

இந்நிலையில் குறித்த காணிச் சுற்று நிருபத்தை ரத்து செய்யுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமத்திரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆணைக்கோரும் விண்ணப்பமொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் மன்றில் ஆஜரான சட்டமா அதிபரின் பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல், மேற்படி சுற்று நிருபத்தை வாபஸ் பெறுவதற்கான அறிவித்தலை விடுக்குமாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு தனக்குஆலோசனைவழங்கியதாககுறிப்பிட்டார்.

இதனையடுத்து சுமந்திரன் எம்.பி சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனகேஸ்வரன் மேற்படி சுற்றுநிருபம் வாபஸ் பெறப்பட்டுள்ளதால் இந்த சுற்று நிருபத்திற்கு எதிரான வழக்கினை வாபஸ் பெறுவதா? இல்லையா? என்பது குறித்து மறுபரிசீலனை செய்யப்படும் என்று கூறினார்.

இதனைத் தொடந்து இந்த வழக்கு தொடர்பான விசாரணையினை எதிர்வரும் மார்ச் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-5)

## யாழ். பொறியியல் பீடத்தை அமைக்க அங்கீகாரம்

யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் அமைக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. இது குறித்த அமைச்சரவை பத்திரத்தை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க சமர்ப்பித் திருந்தார்.

இதன்படி கிளிநொச்சி-அறிவியல் நகரில் யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் விவசாய பீடம் என்பன இயங்கவுள்ளன.

கடந்த வருடம் ஜுன் மாதம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொறியியல் பீடம் அமைக்க வசதி செய்து கொடுக்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

இதன்படி கிளிநொச்சியில் பொறியியல் பீடத்திற்கான கட்டிடத்தை புனரமைப்பு செய்ய ரூ. 393.79 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (எ-5)

## எதிர்க் கட்சியிடம் தோற்றுப்போன ஐ.தே.க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாநகரசபையை கைப்பற்றி மூன்று மாதங்களே கடந்துள்ள நிலையில் நேற்று வியாழக்கிழமை அமைக்கப்பட்ட நிதி விவகாரங் களுக்கான நிலைக்குழுவை அந்தக் கட்சி மாநகர சபையின் எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் இழந்திருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பிரதிநிதிகளை ஆதரித்து வாக்களித்த காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இது பற்றி கருத்து தெரிவித்த கொழும்பு மாநகர சபையின் மேஜர் ஏ.ஜே.எம்.முஸம்மில் நிதிக் குழுவைத் தவிர மற்றக் குழுக்கள் ஐக்கிய தேசியக் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களின் இடமாற்றத்தில் இறுக்கமான போக்கு இருக்காது

### கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் ஆளுநர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் இடமாற்றத்தில் பெண் ஆசிரியர்களை தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் முடிந்தவரை அந்தந்த மாவட்டங்களுக்குள் ஆசிரியர் இடமாற்றத்தை மேற்கொள்வதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கல்வி அபிவிருத்தி தொடர்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர்களுக்கான இடமாற்றம் (20ஆம் பக்கம் பார்க்க)


## புதிய ரயில்பாதை திட்டம் ஆரம்பித்தார் கிருஸ்ணா

காலி முதல் இந்துருவ வரையிலான புதிய ரயில் பாதை நிர்மாண திட்டத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா நேற்று ஆரம்பித்துவைத்தார். காலி ரயில் நிலையத்தில் இவ் வைபவம் நடைபெற்றது.

50 கிலோமீற்றர் நீளமான இந்த ரயில் பாதை இந்திய அரசாங்கத்தின் (20ஆம் பக்கம் பார்க்க)



பயனீர் அக்ரோ ரெக்ஸ்
PIONEER AGRO TEX
சல்வார் ரகங்கள், சாரி ரகங்கள், வேஷ்டி ரகங்கள்,
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து
மொத்த வியாபாரம் செய்பவர்கள்.
சைனா வீதிக்கு அருகில்
பிறைம் பிளாசா
261/19, பிரதான வீதி,
கொழும்பு-11
M:- 077 1077215
Ph:- 011 2394906
pmsandco@yahoo.com
Near China Street,
PRIME PLAZA
261/19, Main St.,
Colombo-11




திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா மங்கல விளக்கேற்றுவதையும், ஆசிரிய ஆலோகர் திருமதி கௌரி முகுந்தன் உரையாற்றுவதையும், அருகில் ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.மகேஸ்வரன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# இணையத்தளங்களுக்கான விதிமுறைகள் அறிவிப்பு!

(கொழும்பு)

அரசின் உத்தரவிற்கமைய பதிவு செய்யப்பட்ட இணையத் தளங்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்து தகவல் ஊடகத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. தகவல் ஊடகத்துறை அமைச்சு 27 இணையத் தளங்களுக்கு மாத்திரமே செயற்படுவதற்கான அனுமதிப்பத்திரத்தை இதுவரையில் வழங்கியுள்ளது.

செய்திகளை வெளியிடும் இந்த இணையத்தளங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து அறிவித்துள்ள தகவல் ஊடகத்துறை அமைச்சு, இதற்கமைய இணையத்தளங்கள் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இணையத்தளங்களுக்காக வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளில் முக்கியமானவை சில,

- இணையத்தளங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்களும், ஊடகவியலாளர்களும் தாங்கள் வெளியிடும் செய்தி தகவல்கள் நூற்றுக்கு நூறு வீதம் உண்மையானது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்
- இணையத்தளத்தில் சேர்த்துக் கொள்ளும் படம் மாற்றி வடிவமைக்கப்படலாகாது.
- இணையத்தளத்தின் ஆசிரியர் ஒரு தவறான செய்தியை வெளியிட்டோம் என்று தெரிந்து கொண்டால் அதை திருத்தி மீண்டும் செய்தியில் சேர்த்துக்கொண்டு இதனால் பாதிக்கப்பட்டவரிடம் மன்னிப்பும் கேட்க வேண்டும்.
- ஒரு செய்தி தொடர்பாக இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் நிலைப்பாட்டை இணையத் தளத்திற்கு தெரிவிப்பதற்கு நியாயபூர்வமான சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும். ஒருவரின் மதிப்புக்கும் உணர்வுக்கும் இரகசியத் தன்மைக்கும் ஏற்புடைய வகையில் இணையத் தளங்கள் நடந்து கொள்ள வேண்டும்.
- சமூகப்பிரச்சினைகளை பொறுத்தவரை வன்முறைகள், கலவரங்கள், போதைப்பொருள் பாவனை, சித்திரவதை, மற்றவர்களை வேதனைப்படுத்தி இன்பம் காணுதல், பாலியல் ரீதியிலான தரக் குறைவான படங்களையும் தகவல்களை வெளியிடாமல் இணையத்தளங்கள் அவதானமாக செயற்படவேண்டும்
- குற்றச்செயல்கள், பாலியல் ரீதியிலான குற்றச்செயல்கள், சிறுவயதினர் மீதான குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் சுமத்தப்படும் வழக்குகள் ஆகியவற்றைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களை வெளியிடுவதை - குறிப்பாக 16 வயதிற்குட்பட்டவர்களின் பெயர்களை தவிர்க்க வேண்டும்.
- ஒருவரின் இன, சாதி, மத, பால்நிலை அல்லது அவரது வலது குறைவு தன்மை, மனோநிலை பாதிப்பு போன்றவற்றை இணைய த்தளத்தில் அறிவிப்பதும் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.
- தற்கொலைச் சம்பவங்கள் பற்றி அறிவிக்கும் போது ஒருவர் எவ்விதம் தற்கொலை செய்து கொண்டார் போன்ற சம்பவங்களை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
- ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம், அவரது இல்லம், அவரது உடல்நிலை பற்றிய செய்திகளை வெளியிடுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- சிறுவயதினர் தங்களது பாடசாலை காலத்தை மகிழ்வுடன் கழிப்பதற்கு அநாவசியமான இடையூறுகளை ஏற்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- தொலைத் தொடர்பு ஒழுங்கு படுத்தும் ஆணைக்குழு தடை செய்த இணையத்தளங்கள் மற்றும் நீதி மன்றத்தின் உத்தரவின்படி தடை செய்யப்பட்ட இணையத்தளங்கள், தரம் குறைந்த பாலியல் உணர்வைத் தூண்டும் படங்களை பிரசுரிக்கும் இணையத்தளங்களுடன் எவ்வித தொடர்பும் இருக்கலாகாது. (எ-5)

# இலங்கை மாணவர் சடலமாக மீட்பு

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் போபால் நகரிலுள்ள மௌலான ஆஸாத் தேசிய பொறியியல் நிறுவகத்தில் கல்வி கற்று வந்த இலங்கை மாணவர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

20 வயதான இம்மாணவர் பொறியியல் இளமாணி (பி.ஈ) கற்கை நெறியை பயின்று வந்தவர் எனவும் அவரிடமிருந்து தற்கொலை குறித்த குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை.

இம் மாணவர் தமது அறைக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார். அறை உட்புறமாக பூட்டப்பட்டிருந்தது. தற்கொலை குறித்து எதுவும் காணப்படவில்லை என கம்லா நகர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எஸ். பதோரியா தெரிவித்துள்ளார். (எ-5)

# அதிபர்களுக்கும் இடமாற்றம் ஆளுநர் நேற்று அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கும் இடமாற்றம் வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர்களின் இடமாற்றம் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் அமுல் படுத்தப்படும்.

அதேநேரம் வடக்கு மாகாணத் தில் கடமையாற்றும் நிறைவேற்று அதிபர்கள் நிரந்தரமாக்கப்பட்டு அவர்களின் இடமாற்றமும் கருத்தில் கொள்ளப்படும் என ஆளுநர் மேலும் தெரிவித்தார். (ந)

# அதிகவிலைக்கு பொருட்களை விற்பனை செய்த 11 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

அதிகவிலைக்கு பொருட்களை விற்றமை, காலவதியான பொருட்களை விற்றமை மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக விலைப்பட்டியல்களை வைக்காமை போன்ற குற்றங்களுக்காக 16 பேர் நேற்று யாழ். மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு பாவனையாளர் அதிகார சபையினால் கைது செய்யப்பட்டனர்.

பண்டத்தரிப்பு, பிரான்பற்று, சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்தார்.

பனடோல், குளிர்பானங்கள் என்பன அச்சடிக்கப்பட்ட விலை யிலும் பார்க்க அதிக விலைக்கு விற்றமை தொடர்பாக 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நேற்று மல்லாகம் நீதிமன்றில் நீதிபதி கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் பனடோல் விற்றமை தொடர்பில் இருவருக்கு தலா ஐயாயிரம் வீதமும், குளிர்பானம் விற்றமை தொடர்பில் 9 பேருக்கு தலா மூவாயிரம் ரூபாய் வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. (எ)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வகை 3 தரப்பாடசாலைகளான அச்சுவேலி ஆரம்ப பாடசாலை மற்றும் சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாழ். கல்வி வலய மாகாணப்பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் சேவை வகுப்பு-I, வகுப்பு 2-Iச் சேர்ந்தவர்களிடமிருந்து கோரப் படுகின்றன.

அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவர்கள் விண்ணப்படிவத்தை அலுவலகத்தில் பெற்று ஜனவரி 30ந் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார். (ச)

'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY : 077 3212711
வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர்
(7239)

## ஆட்கள் தேவை

Elephant house Ice cream வியாபார நிலையத்துக்கு Ice Cream van ஓட்டுனரும், Salesman மற்றும் முச்சக்கரவண்டி ஓட்டுனரும் தேவை. (முச்சக்கர வண்டி ஓட்டுனரே வியாபாரம் செய்பவராக இருத்தல் வேண்டும்.)
தொடர்பு:-
56, மணிக்கூட்டு வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
0779910154, 0214918407
(7327)

## வேலையாட்கள் தேவை

புத்தகம், கொப்பி கட்டுபவர்கள்/ பழகுபவர்கள் (இருபாலாரும்) தேவை. பழகுபவர்களுக்கும் சம்பளம் வழங்கப்படும்.
போஸ்கோ
(நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்)
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(C-5602)

## வீடு விற்பனைக்கு

நீர்வேலி மேற்கு மீனாட்சி கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள 4 1/2 பரப்பு காணியுடன் 2 அறை, குளியலறை மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. விலை பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 0776405928
0770712468
(7325)

"கற்பவை கற்க; கற்பவை கசடறக் கற்க"
YAALH ENGLISH ACADEMY
நிறுவுநர் + ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
Practical English Courses
- ஆசிரியர்க்கு
- உத்தியோகத்தர்க்கு
- உயர்கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- தாய்மார்க்கு: உங்கள் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கும் பெரும் பயன்.

ஆரம்பம்: 21.1.2012 / இலவசம்: முதலிரு வகுப்புக்கள்
முழுவிபரங்கள் பெற + பெயர் பதிவு செய்ய : 077 3212 711
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ் நகர்
(7044)

# இன்று ஒரு தகவல்

## இருக்கும் வரையில்...

ஓர் அலுவலகம். அதிலே ஒரு தலைமை அதிகாரி. அவர் மிகவும் உண்மையானவர்... நேர்மையானவர். அலுவலகத்திலே உள்ள ஒவ்வொரு பொருளையும் மிகவும் கவனமாகப் பாதுகாத்து வந்தார்.

மேசை... நாற்காலி... குப்பைக்கூடை எல்லாம் அந்தந்த இடத்திலே இருக்கிறதா என்பதை பார்த்துக் கொள்வார்.

நாற்காலியிலே ஒரு கால் உடைந்து இருந்தாலும் அதை உடனே சரி பார்த்து செய்து கொள்வார்.

அதாவது அலுவலகத்திலே உள்ள ஒவ்வொரு பொருளையும் தனது சொந்தப் பொருளாக நினைத்துப் பாதுகாத்துக் கொள்ளும் தன்மை அவரிடம் உள்ளது.

அந்த அதிகாரிக்கு ஒருநாள் திடீரென்று மாற்றல் உத்தரவு வந்தது.

உடனே தன்னுடைய பெட்டி படுக்கையைக் கட்டிக் கொண்டு புறப்பட்டார்.

இப்போது அந்த அலுவலகத்தில் உள்ள மேசையைப் பற்றியோ நாற்காலியைப் பற்றியோ அவருக்குக் கவலையில்லை.

அந்த அலுவலகத்திலே இருந்த வ்ரைக்கும் அங்கே இருந்த எல்லா பொருட்களுக்கும் அவரே பொறுப்பு.

அவரை இடம் மாற்றியதும் இவையெல்லாம் தன்னுடையதல்ல. சமுதாயத்தைச் சேர்ந்தது. அப்படி என்கிற எண்ணம் வந்துவிடும்.

தான் வெறும் 'பொறுப்பாளி' மட்டுமே என்ற எண்ணம் உருவாகிறது. இதைக் காப்பாற்றுவது மட்டும் தான் என்னுடைய கடமை என்ற எண்ணத்துடன் செயற்படுகிறார்.

அதே அலுவலர் மாற்றலாகிப் போகும்போது வீட்டிலே உள்ள எல்லாவற்றையும் கட்டி லொறியிலே ஏற்றுகிறார். என்ன காரணம்?

இவையெல்லாம் என்னுடையது என்ற எண்ணம்.

நாம் எல்லாவற்றையும் அனுபவிக்கலாம். ஆனால், எதுவும் என்னுடையதில்லை என்ற எண்ணம் நமக்கு வரவேண்டும்.

இருப்பவையெல்லாம் இயற்கை கொடுக்கிற பிரசாதம்.

அரசாங்கம் கொடுப்பதை அந்த அதிகாரி காப்பாற்றினார். பொறுப்பிலே இருக்கிற வரைக்கும் இதையெல்லாம் காப்பாற்ற வேண்டியது தனது கடமை என்று நினைத்தார்.

இவ்வுலகிலே இருக்கும்போது கடமையை ஒரு யோகமாகச் செய்ய வேண்டும். இந்த உலகத்திலே இருக்கிற வரைக்கும் என் வீடு... என் மனைவி... என் மக்கள்... இவையெல்லாம் இயற்கை அல்லது இறைவன் நமக்குக் கொடுக்கும் பிரசாதம் என்று உணரவேண்டும். அப்படி புரிந்துகொண்டு நமது கடமைகளைச் செய்ய வேண்டும்.

ஒரு மனிதனுக்கு எது நிரந்தரம்?

எதுவரை காலம் இருக்கப்போகிறான்? யாருக்குமே தெரியாது. அதனாலே வாழும்வரை கடமையாற்றிக்கொண்டே காலத்தை நகர்த்த வேண்டும். எல்லாம் இயற்கை தந்த வரப்பிரசாதம் என்ற பாவனையோடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் 635 பயனாளிகளுக்கு பல்வேறு உதவிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் கடந்த 2011 ஆம் ஆண்டு 635 பயனாளிகளுக்கு பல்வேறு உதவித்திட்டங்கள் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் வழங்கப்பட்டுள்ளது.

பொதுசன மாதாந்த உதவிப் பணம் கோரி விண்ணப்பித்தோரில் 311 பயனாளிகள் புதிதாக இணைக்கப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டன.

ஏற்கனவே, பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்ற 3 ஆயிரத்து 41 பயனாளிகளின் கொடுப்பனவுத் தொகை கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டது. 104 புற்று நோயாளர்களுக்கும் 4 தொழு நோயாளர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன.

வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட 29 பயனாளிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் சுய தொழில் உதவிக் கொடுப்பனவாக வழங்கப்பட்டு அவர்களது வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டது.

புயல், காற்று, மழை என்பவற்றால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளை புனரமைக்க 19 குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

விசேட தேவை உடையவர்களது விண்ணப்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூவருக்கு செயற்கை கால்களும் மூவருக்கு முச்சக்கர வண்டிகளும் மூவருக்கு மூக்குக் கண்ணாடிகளும் இருவருக்கு ஊன்று கோல்களும் ஒருவருக்கு சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டன.

விசேட தேவையுடைய 34 குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா மாதாந்தம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

மிகவும் வறுமைக்கு உட்பட்ட 16 வயதுக்குட்பட்ட மாணவர்களைக் கொண்ட நான்கு குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

மருத்துவ சிகிச்சைக்கான போக்குவரத்திற்கு நிதி வசதியின்றி இருந்த 12 குடும்பங்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா யுனிசெப் நிறுவனத்தால் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

கடந்த நவம்பர், டிசெம்பர் மாதங்களில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட 25குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளும் 105 குடும்பங்களுக்கு கூரை விரிப்புகளும் வழங்கப்பட்டன.

தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்த 142 முதியோருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதுடன் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியம் பெறுவதற்காக 69 முதியோர் இணைக்கப்பட்டனர்.

கைதடி நவீல்ட் பாடசாலைக்கு பரிமாண நன்கொடையாக 11 இலட்சத்து 95 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டது.

மேற்படி உதவித்திட்டங்கள் தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் கிராம சேவகர்களது சிபாரிசின் அடிப்படையில் வழங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-3-29)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 65 | 60-100 | 70 |
| பச்சைமிளகாய் | 130 | 160 | 190 |
| தக்காளி | 80-90 | 60 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 30 |
| கோவா | 80 | 60 | 60 |
| கரட் | 80 | 120 | 100 |
| பூசணி | 50 | 40 | 60 |
| புடோல் | 55 | 70 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 35 |
| சின்ன வெங்காயம் | 70 | 20-60 | 70 |
| பெரிய வெங்காயம் | 65 | 80 | 90 |
| பாகற்காய் | 120 | 40 | 150 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 70 |
| பயற்றங்காய் | 150 | 160 | 150 |
| லீக்ஸ் | -- | 100 | 80 |
| பீற்றூட் | -- | 120 | 100 |
| கறிமிளகாய் | -- | 160 | 250 |
| முருங்கைக்காய் | -- | 400 | -- |
| போஞ்சி | 90 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 25 | 25 |

# இராசி பலன்

*20.01.2012*

*(தை 06, வெள்ளிக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு*

*துவாதசி மாலை 5.23 மணிவரை*

*கேட்டை மாலை 5.54 மணிவரை*

*இராகுகாலம் 11.05-12.35 மணிவரை*

*சுபநேரம் 6.35-8.05 மணிவரை*

*பிரதோச விரதம்*

**மேடம்** அமைதிக்குறைவான நாள், மாலை நேரங்களில் புதிய உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் ஏற்பட்ட மனக்குறைகள் குறையலாம், போசன சுகமுண்டு, பண விரயங்கள் கூடும்.

**இடபம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரும் நாள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** உற்சாகமாகப் பணி புரியும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வதற்கான சூழ்நிலை அமையும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள்.

**கடகம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சொல்லை செயலாக்கி காட்டுவதில் இருந்த இடையூறுகள் அகலும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தன வரவு திருப்திகரமாக அமையும்.

**சிங்கம்** இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், தாய் வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**கன்னி** மறக்க முடியாத சில சம்பவங்கள் நடைபெறலாம், எப்படி நடக்குமோ என நினைத்த காரியமொன்று நல்ல விதமாக நடைபெறலாம், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல விதமாக நடைபெறும்.

**துலாம்** புதிய பாதை புலப்படும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், தொலைபேசி வழித்தகவலால் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், வசதி, வாய்ப்புக்கள் தேடி வரலாம், வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**தனுசு** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், உற்றார், உறவினர்களுக்காக ஒரு தொகையைச் செலவு செய்யும் சூழ்நிலை அமையலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருங்கால நலன் கருதி சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் தோன்றும், உத்தியோக உயர்வு கிட்டும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கும்பம்** புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், அன்பு நண்பர்கள் ஆதரவுக்கரம் நீட்ட முன்வருவர், அருமையான நாள், ஆரோக்கியமான நாள்.

**மீனம்** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம்.

வளவன்

## பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினால் வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு பட்டச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் பட்டச்சான்றிதழ்கள் பெற தகுதியுடையவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் வெளிவாரிப் பிரிவில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வெளிவாரிப் பரீட்சை பிரிவு இணைப்பாளர் க. சிவராஜா கேட்டுள்ளார். (அ-7)

# யுத்தத்தில் இருந்து மீண்ட முழுநாட்டையும் கட்டியெழுப்ப இந்தியாவின் உதவி தேவை

## வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்திலிருந்து மீண்ட முழுநாட்டையும் அபிவிருத்தி செய்வதற்கு இந்திய அரசின் ஒத்துழைப்பை இலங்கை அரசாங்கம் பெற வேண்டியுள்ளது என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் நிதியுதவியுடன் 10 ஆயிரம் துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொதுநூலகத்திற்கு முன்பாக நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் குறிப்பாக வட பகுதியில் மீளக்குடியேற்றம், புனரமைப்பு, மீள்கட்டுமானப் பணிகள் தொடர்பில் இந்திய அரசின் பங்களிப்பு தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்திலிருந்து மீண்ட முழுநாட்டையும் அபிவிருத்தி செய்வதற்கும் காணிப்பங்கீடு, விவசாயம், கைத்தொழில், புகையிரதப் போக்குவரத்து, வீதிப்போக்குவரத்து போன்றவற்றை மேம்படுத்துவதற்கும் இலங்கை அரசானது இந்திய அரசின் ஒத்துழைப்பை பெற வேண்டியுள்ளது.

இலங்கை, இந்திய அரசாங்கங்களுக்கிடையிலான நல்லுறவு தொடர்ந்தும் பேணப்பட வேண்டுமென விரும்புவதோடு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணாவை இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் மக்களின் சார்பிலும் வரவேற்பதோடு நன்றியும் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர். (அ-6)

# யாழ். போதனாவைத்தியசாலைக்கு கட்டட வசதிகளின் தேவை அதிகம்

## யாழ். போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் பொதுவாக வைத்தியசாலைக்கு கட்டடத்தேவைகள், ஆளணிப்பற்றாக்குறை என்பனகாணப்படுவதாக யாழ். போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

இவ்வருடத்தில் என்றுமில்லாதவாறு 92 தாதியர்கள் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள போதும் எமக்கு மேலும் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இவற்றைவிட குழந்தைகள் பிரிவு, விபத்துப் பிரிவு, இதய சத்திர சிகிச்சைப்பிரிவு, நரம்பியல் பிரிவு போன்றவை தொடர்பான பிரிவுகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு கட்டட வசதிகள் எமக்கு தேவையாகவுள்ளன.

மேலும் வைத்தியர்கள், தாதியர்கள் ஆகியோருக்கான தங்குமிட விடுதிகள் என்பனவும் உடனடியாக தேவைப்படுகின்றதோடு மேலும் புதிய நோயாளர் விடுதிகள் தேவைப்படுகின்றன.

தற்போது கட்டப்படும் கட்டடங்கள் எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதிக்குள் பூர்த்தியடைந்துவிடும்எனவும் அவர்மேலும் தெரிவித்தார். (அ-2-4)




## அறிவித்தல்

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா கற்கை நெறியினை தொடரும் முதலாம் ஆண்டு மாணவர்கள் நாளை சனிக்கிழமை வகுப்புக்களுக்கு தவறாது சமுகமளிக்க வேண்டும் என பிராந்திய இணைப்பாளர் த.வில்வநாதன் கேட்டுள்ளார். (அ- 7)

# சாவ. ஆதார வைத்தியசாலையில் தைபஸ் காய்ச்சல் நோயாளர்கள்!

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வருவோரில் தைபஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. காய்ச்சல், உடல்வலி, தலையிடி போன்றவற்றினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் மருத்துவ பரிசோதனையிலேயே தைபஸ் காய்ச்சல் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் கடந்த நவம்பர் மாதத்தில் ஒருவரும் டிசெம்பர் மாதத்தில் 11 பேரும் தைபஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டநிலையில் நோயாளர் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். வரட்சியான காலப்பகுதியில் பெருகக்கூடிய தெள்ளு மற்றும் உன்னி போன்றவை மழை வெள்ளம் தேங்கி நிற்கும் காலத்தில் பல்கிப் பெருகி மக்களைத் தாக்கி வருவதாக வைத்திய வட்டாரங்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளன.

இந்தக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களுடன் தொடர்புகொண்ட போது மழை மற்றும் வெள்ளம் காரணமாக வளர்ப்பு மாடு, ஆடு, கோழி, நாய் ஆகியவற்றை தமது வீட்டுக்குள்ளும் வீட்டு ஓரத்துடனும் கட்டி வைத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நோயை கட்டுப்படுத்தும் முயற்சியில் சுகாதார திணைக்கள தொற்று நோயியல் பிரிவு, யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவ பிரிவு மற்றும் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தினர் ஆகியோரே கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

# பகிரங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் **உயர்கல்வியில் எதிர்நோக்கும் சமகால நெருக்கடிகளும், பல்கலைக்கழக புதுமுக மாணவர்களும்** என்ற பகிரங்க கலந்துரையாடல் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கலைப்பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் ப.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் **க.பொ.த.உயர்தரப் பரீட்சை-2011 பெறுபேறுகளும் இசட் புள்ளி கணிப்பீட்டு முறையும்** என்னும் தலைப்பிலான ஆரம்ப உரையினை கணித புள்ளிவிபரவியல் துறை கலாநிதி செ.அறிவழகனும், **தனியார் பல்கலைக்கழக சட்ட மூலம்** என்னும் தலைப்பிலான ஆரம்ப உரையினை சட்டத்துறை கு.குருபரனும் ஆற்றவுள்ளனர்.

எனவே, க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளது என்பதனால் அனைவரையும் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ)





அல்வாய் வடக்கு குமுதினி சனசமூக நிலையம் உழவர் திருநாளை முன்னிட்டு நடத்திய கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் வெற்றியீட்டிய மாலுசந்தி மைக்கல் அணியின் தலைவருக்கு பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் எஸ்.சஞ்சீவன் வெற்றிக்கேடயத்தை வழங்குவதையும் வெற்றி பெற்ற அணிவீரர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ். செல்வதீபன்)

# தென்மராட்சி பிரதேசத்தில் காசநோய் விழிப்புணர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் காசநோய்த் தாக்கம் குறித்த விழிப்புணர்வு கடந்த வாரம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

இக்காலாண்டுக்குரிய செயற்பாட்டுக்கான கலந்துரையாடலில் சுகாதார வெளிக்களப்பணியாளர்கள் ஈடுபடவேண்டுமெனவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பல்வேறு தரப்பினராலும் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட பிரிவில் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படவுள்ள காலாண்டுக்குரிய செயற்பாட்டுக்கான கலந்துரையாடலில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், பல்வேறு பிரிவு வைத்திய பொறுப்பதிகாரிகள், தென்மராட்சி பிரதேச செயலக பிரதிநிதி, சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபையின் தவிசாளர்கள் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பணிமனையினரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை பணிமனை உத்தியோகத்தர்கள் திறம்பட செயற்படுத்தியமைக்கும் இதற்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைத்த நகரசபை மற்றும் பிரதேச சபையினருக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

அதேபோல் எதிர்வரும் காலத்திலும் உள்ளூராட்சி சபைகள் பிரதேச செயலகம், கால்நடைவைத்தியர் அலுவலகம் ஆகியவற்றின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது. (அ-3-29)

# வடமராட்சி கிழக்கில் மீன்பிடிப்பதற்கு சிலாபம் மீனவர்களுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் சிலாபத்தை சேர்ந்த மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதற்கு பாதுகாப்புஅமைச்சு இணங்கியுள்ளது.

காலம் காலமாக இப்பகுதியிலுள்ள சுண்டிக்குளம், வண்ணான்குளம் ஆகிய பகுதிகளில் சிலாபத்தை சேர்ந்த மீனவர்கள் கரவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

எனினும் கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக குறித்த இடத்தில் மீன் பிடிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இது தொடர்பாக குறித்த மீனவர்கள் சென்ற வருடம் பாதுகாப்பு அமைச்சரிடம் மேற்படி இடத்தில் மீன்பிடிப்பதற்கு அனுமதி கோரிய போதும் அதனை பாதுகாப்பு அமைச்சு மறுத்திருந்தது.

எனினும் இவ்வருடம் இப்பகுதியில் குறித்த மீனவர்கள் கரவலை தொழிலில் ஈடுபடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி தருவதாக கூறியுள்ளதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளர் ஆர்.ரவீந்திரனையும் குறித்த மீனவர்கள் சந்தித்து உரையாடியதுடன் பலாலி படைத் தலைமையகத்திலும் இது தொடர்பாக சந்தித்து கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# கடனட்டைமோசடி; இலங்கையர் கைது

கடனட்டை மோசடி தொடர்பில் இரண்டு இலங்கையர்களை இந்தியாவின் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி கடனட்டைகளைப் பயன்படுத்தி சந்தேகநபர்கள் இருவரும் தன்னியக்க இயந்திரங்களில் இலட்சக்கணக்கான ரூபா பண மோசடியில் ஈடுபட்டிருப்பதாக ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் இருந்து 70 போலி கடனட்டைகளும் ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

23 வயது மற்றும் 31 வயதான இரண்டு சந்தேகநபர்களுக்கும் உதவியதாக கூறப்படும் மேலும் 3 இலங்கையர்கள் தொடர்பிலும் தகவல்கள் வெளியாகியுள்ளதாக இந்திய செய்திகள் குறிப்பிடுகின்றன.

பொலிசாரால் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கையர்களும் மேலதிக விசாரணைகளுக்காக இந்திய மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# இலங்கையின் சுதந்திரதினத்தை தமிழகத்திலும் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையின் 64 ஆவது சுதந்திரதின விழா தமிழகத்திலும் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை மகாபோதி சபையும் தென்னிந்தியாவில் அமைந்துள்ள இலங்கை உதவி தூதுவராலயமும் இணைந்தே செய்கின்றன.

இலங்கையின் சுதந்திரதினவிழா 2001 ஆண்டு தொடக்கம் இற்றைவரை தொடர்ந்தும் தமிழகத்தில் இடம்பெற்று வருகின்றன. இம்முறை இடம்பெறுவென 12 ஆவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் இடம்பெறவுள்ள மேற்படி இலங்கையின் சுதந்திரதின விழாவை முன்னிட்டு கோலாகல ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிகழ்வுகளினால் தமிழக மக்களுக்கும் இலங்கை யருக்கும் இடையில் புரிந்துணர்வுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

அத்துடன் இருநாட்டு மக்களுக்கு இடையில் அந்நியோன்ய நம்பிக்கையை கட்டியெழுப்புவதே மகாபோதி சபையின் நோக்கமாகும்.

சென்னையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள மேற்படி சுதந்திரதின விழாவில் இந்தியாவிற்கான இலங்கையின் துணைத் தூதுவர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி, மதத் தலைவர்கள், புத்திஜீவிகள் மற்றும் இந்தியா வில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்கள் சிலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

# அதிவேக மார்க்கத்தில் மேலதிக பேருந்துகள்

தெற்கு அதிவேக மார்க்கத்தில் இன்று தொடக்கம் இரண்டு மேலதிக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

பயணிகளால் விடுவிக்கப்பட்ட கோரிக்கைகளை கவனத்திற்கொண்டே புதிய பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் எம்.டீ பந்துசேன குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு அதிவேக வீதியில் தற்போது நான்கு பேருந்துகள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் 40 நிமிடத்திற்கு ஒருமுறை காலி-மஹரகம இடையே பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் எம்.டீ பந்துசேன மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# அவுஸ்திரேலியாவிலிருந்து ஜேர்சி இன மாடுகள் இலங்கைக்கு இறக்குமதி

நாட்டின் பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையச்செய்யும் நோக்குடன் அவுஸ்திரேலியாவிலிருந்து ஜேர்சி இனத்தைச் சேர்ந்த 290 இலட்சம் ரூபா பெறுமதியான 10 எருதுகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (EA348) ரக விமானத்தில் வந்திறங்கின.

கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் ஆலோசனைப்படி இறக்குமதி செய்யப்பட்ட எருதுகளின்மூலம் தலா ஒரு எருதிலிருந்து 75 ஆயிரம் விந்துகள் பெறப் படவுள்ளன.

இதன் ஊடாக 10 எருதுகள் மொத்தமாக 7 இலட்சத்து 50 ஆயிரம் ஜேர்சி கன்றுகள் கலப்பின இனப்பெருக்கத்தின் மூலம் 4 தொடக்கம் 5 ஆண்டுகளில் இனவிருத்தி செய்யப்படவுள்ளன.

இச்செயற்பாடானது எதிர்காலத்தில் பாலுற்பத்தியில் இலங்கை தன்னிறைவடைவதற்கு தூண்டுகோலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுவாக இவ்வின மாடுகள் இலங்கையின் காலநிலைக்கு மிகவும் பொருத்தமானதாகும். அதனாலேயே அங்கிருந்து மாடுகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதன் பால் கறவையும் அதிகம். (அ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

காப்புறுதிப் பத்திரமின்றியும் ஏனைய வாகனங்களுக்கு இடையூறாகவும் வாகனத்தை செலு த்தினார் என்ற குற்றச்சாட்டில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் ரூபா 5 ஆயிரம் அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டார்.

* * * * * *

சாரதி அனுமதிப்பத்திரமின்றி முச்சக்கரவண்டியை செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் ரூபா 2 ஆயிரத்து ஐந்நூறு அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

* * * * * *

நுளம்புகள் பெருகும் விதமாக பாத்திரங்களையும் ரயர்களினையும் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 5 நபர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் இரு நபர்களுக்கும் தலா 2 ஆயிரம் ரூபாவும் ஏனைய மூன்று நபர்களுக்கும் தலா ஆயிரம் ரூபாவும் அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டார்.

* * * * * *

வீட்டின் கழிவு நீரினை வீதியில் விட்டனர் என்ற குற்றச்சாட்டில் இரு நபர்கள் யாழ்.கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் இரு நபர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (அ-4)



கிளிநொச்சி ஐந்தாம் வட்டாரப் பகுதி வீடொன்றில் பிள்ளையார் முகத்துடன் பசு மாடு கன்று ஒன்றினை ஈன்றது. இது பிறந்தவுடன் இறந்துவிட்டது. இக் கன்றை படத்தில் காணலாம்.






பாடசாலைகளுக்கான போசாக்கு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் போசாக்கு உணவை கல்வியமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ , விருந்தினர்கள் உள்ளிட்டோர் ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்,எஸ்.செல்வதீபன்)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வாகன விபத்துக்கள் அதிகரிப்பு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்வடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் 50 விபத்துக்கள் இடம் பெற்றிருந்ததுடன் இவ் வருடத்தில் 30 வாகன விபத்துக்கள் இடம்பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தெற்கு அதிவேக வாகன விபத்துக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியிருப்பதாவது, கடந்த வருடம் நவம்பர் மாதம் 28 ஆம் திகதியே தெற்கு அதிவேக நெடுஞ் சாலை திறக்கப்பட்டது. குறித்த நெடுஞ்சாலை திறக்கப்பட்டு 24 மணித்தியாலத்துக்குள் முதலாவது வாகன விபத்து இடம்பெற்றமை குறிப்பித்தக்கது.

இந்த அதிவேக நெடுஞ்சாலையில் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் வாகனம் செலுத்திய 900 பேருக்கு எதிராக இதுவரை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 362 பேருக் கு எதிராக இவ்வருடத்திலேயே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த வருடத்தில் இடம்பெற்ற வாகன விபத்துக்களை இவ்வருட வாகன விபத்துக்களுடன் ஒப்பிட்டு பார்க்கையில் இவ்வருடம் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளமையைக் காண முடிகிறது. அத்தோடு இந்த அதிவேக நெடுஞ்சாலையில் அண்மையில் பயணிகள் பஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பாடசாலை சேவை சாரதிகளின் தகைமைகளை ஆராய உத்தரவு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பாடசாலை சேவையில் ஈடுபடும் வான் சாரதிகளின் தகைமை மற்றும் அனுபவம் தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்கிஸை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தை கருத்திற்கொண்டு ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு இணைப்புச் செயலாளர் விஜயானந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் விபத்து தொடர்பில் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த வான் சேவையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் வான் சாரதிகள் செயற்படுவார்களாயின் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலை வருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் இணைப்புச் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)


19 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இ.ச.பேரம்பலம்

(வாரிவளவு காரைநகர்)

பிறப்பு 26 04 1926

அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
இன்னமுதாய இனிய அறிவுரைகள் கூறி
ஈடேற வணிகத்தில் வழிகள் பலகாட்டி
உன்னதமான வாழ்வை எமக்களிக்க
ஊக்கமுடன் உழைத்து வந்தீர்!
எண்ணரிய சேவைகள் பல செய்து
ஏற்றமுற வைத்தீர்! எம்மை எல்லாம்
ஐயுறவு ஏதுமின்றி எம் வாழ்வு மலர்ந்திட
ஒற்றுமையாய் எம்மை அணைத்து
ஓதற்கரிய பாடல் கலைகள் யாவும் புகட்டி
ஔவையின் அருளுரையும் இனிதே தந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைத்த
தெய்வமே! எங்கள் அன்புத் தந்தையே
எம்மை விட்டு விண்ணுலகு சென்று
ஆண்டுகள் பத்தொன்பது பறந்தோடிப் போயும்
மறக்குமா? எம் நெஞ்சம்
என்றென்றும் உம் நினைவில் வாழும்

மணி ஓசை
383 கோயில் வீதி,
நல்லூர்.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இறப்பு 19 01 1993

(சி/5600)




# புலித் தலைமைக்கு மன்னிப்பு வழங்க பங்காளிக்கட்சிகளுக்கு அரசு பயந்தது

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

**ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.என்.பி. ஆகிய கட்சிகளுக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அஞ்சியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.**

**கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் இந்தத் தகவலை அனுப்பி வைத்துள்ளார்.**

பாதுகாப்புச் செயலாளருக்கும் அமெரிக்கத் தூதுவருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பினை அடிப்படையாகக் கொண்டு இந்த தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய சகல விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் மன்னிப்பு வழங்க விரும்பினார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், புலனாய்வுத்துறைதலைவர் பொட்டு அம்மான் உள்ளிட்ட சகல உறுப்பினர்களுக்கும் மன்னிப்பு வழங்க அரசாங்கம் விரும்பியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யுத்த களத்தில் போராடிய புலி உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டதா? என பிளேக் பாதுகாப்புச் செயலாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

பொது மன்னிப்பு வழங்குவது குறித்து அரசாங்கத்தின் விருப்பம் சிங்களதேசியவாத கட்சிகளை ஆத்திரமடையச் செய்யும் என பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டதாக குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக ஜே.வி.பி.,ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.என்.பி.போன்ற கட்சிகள் இவ்வாறு அதிருப்தி வெளியிடக் கூடும் என பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மன்னிப்பு வழங்கும் அரசாங்கத்தின் விருப்பம் பகிரங்கப்படுத்தப்படாவிட்டால் அந்த முயற்சியில் பயனிருக்காது என அவர் தெரிவித்திருந்தார் என விக்கிலீக்ஸ் தெரிவித்திருந்தது. (அ-2)

## சந்தேக நபருக்கு விளக்க மறியல்

(கொழும்பு)

பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை கொள்ளையிட்ட இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தருக்கு விளக்க மறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொட பேருந்தில் பயணம் செய்த பெண் ஒருவர் அணிந் திருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டுச் சென்றதாக இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவ உத்தி யோகத்தரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராணுவத் தலைமையகத்தில் புலனாய்வு உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் புத்தி ஜனக்க பெரமுணாராச்சி என் பவருக்கு எதிராக இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## மின்சார சபை ஊழியர்களுடன் ஜனாதிபதி மஹிந்த சந்திப்பு

மின்சார சபை ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் மின்சார சபை தொழிற் சங்கங்களுக்கும் இடையில் நேற்று முன் தினம் முக்கிய பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றுள்ளது.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற மேற்படி பேச்சுவார்த்தையில் மின்சார சபை ஊழியர்களின் சம்பளத் திருத்தம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

மின்சார சபை ஊழியர்கள் நேற்று முந்தினம் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தினால் கொழும்பு கோட்டை பகுதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டதுடன் அன்றாட பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.

சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைத்தே மின்சார சபை ஊழியர்கள் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்சார சபைக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதுடன் அப்பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

மின்சார சபை ஊழியர்களுக்கு 25 வீத சம்பள உயர்வு வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ள நிலையில் அதனை 45 வீதமாக அதிகரிக்கக் கோரியே ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுவார்த்தையில் இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, மஹிந்தானந்த, அலுத்கமகே, மைத்திரிபால சிறிசேன, பிரதியமைச்சர் பிரேமலால், ஜயசேகர, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர மற்றும் மின்சக்தி அமைச்சு அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டுள்ளனர். (அ-2)

## கூட்டமைப்புக்கு இந்தியா புத்திமதி கூறவேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாட்டுடன் இணைந்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொண்டு பேச்சுவார்த்தையினை முன்னெடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியா புத்திமதி கூற வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார். கிளிநொச்சி அறிவியல் நகரில் புனரமைக்கப்பட்ட சிவபாத கலையகம் எனும் பாடசாலையின் கட்டடத்தினை அவர் திறந்து வைத்தார். இங்கு இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே டக்ளஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்தியிருந்தால் யுத்த அழிவுகளை தடுத்திருக்க முடியும். ஆனால் இந்திய- இலங்கை ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாமையே அழிவுகளுக்கு காரணமாக அமைந்தது. தமிழ்த் தலைமைகள் உரிய வகையில் செயற்பட்டிருந்தால் அழிவுகளை தடுத்திருக்கலாம்.

காலம் கடந்த நிலையிலும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதனை நான் வரவேற்கின்றேன். பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்குள் வந்து தீர்வைப் பெற முயற்சிக்க வேண்டும். அதற்கான புத்திமதியினை கூட்டமைப்பினருக்கு இந்தியா கூற வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, ரிசாத் பதியூதின், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க வேண்டும் என்று இந்தியா அவர்களுக்கு புத்திமதி கூற வேண்டும். (அ-2)


## பதவி வெற்றிடம்

**50** ஆண்டுகள் மக்களிற்கு மகத்தான சேவையினை மேற்கொண்டுள்ள அரச காப்புறுதி நிறுவனமான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் **கிளிநொச்சிக் கிளைக்குப்** பின்வரும் பதவிகளிற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

### Marketing Executive சந்தைப்படுத்தல் அதிகாரி

**தகைமை**

- காப்புறுதித் துறையில் 1 வருட முன் அனுபவம் அவசியம்.
- சிறந்த தலைமைத்துவ ஆற்றல்.
- வயது 25–40

**நன்மைகள்**

- அடிப்படைக் சம்பளம், வாகனப்படி உள்ளடங்கலாக மாதம் 35,000/=
- இலவசக் காப்புறுதி, மருத்துவச் செலவுக் கொடுப்பனவுகள்
- E.P.F, E.T.F
- மற்றும் பல

### Bank Assutance Officer வங்கியின் காப்புறுதி உத்தியோகஸ்தர்

**தகைமை**

- காப்புறுதித் துறையில் 1 வருட முன் அனுபவம் அவசியம்.
- கல்வித் தகைமை G.C.E. A/L
- வயது 20 – 25



**நன்மைகள்**

- அடிப்படைச் சம்பளம்
- போனஸ் கொடுப்பனவு
- மோட்டார் சைக்கிள்
- மருத்துவச் செலவு

### Team Leader குழுத் தலைவர்

**தகைமை**

- காப்புறுதித் துறையில் 2 வருட முன் அனுபவம்
- G.C.E. A/L
- வயது 21 – 40




### Advisor ஆலோசகர்

**தகைமை**

- 18 வயது பூர்த்தி.
- G.C.E. O/L கணிதம், தமிழ் உள்ளடங்கலாக 6 பாடம் சித்தி.
- பகுதி நேரமாக வேலை செய்ய விரும்புகின்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- அரச மற்றும் தனியார் துறைகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.



தகுதியானவர்கள் தொலைபேசி இலக்கம் உள்ளடங்கிய சுயவிபரக் கோவையினை நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி நிலையைக் குறிப்பிட்டு எதிர்வரும் 30.01.2012ற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்,
ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்,
இல. 31, A 9 வீதி, கிளிநொச்சி.

(சி-5564)

# தை மாத இராசி பலன்கள்

# 15.01.2012-12.02.2012




**சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள் வரை**

**வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நேரம்!**

**நான்கு பேர் நம்மை பார்த்து மதிக்க வேண்டும் என்று விரும்பும் துலாம் இராசி நேயர்களே!**

நாகரீகம் தெரிந்த மனிதர்கள் நீங்கள். செல்வச் செழிப்பு மிக்கவர்களின் ஒத்துழைப்பு எப்போதும் உங்களுக்கு உண்டு. உங்கள் வாழ்வில் கூட இருப்பவர்களால் மனக்கலக்கம் ஏற்படலாமே தவிர, தேடிய நண்பர்களால் மனக்கலக்கம் ஏற்படாது. மற்றவர்களின் குறைகளை பெரிதுபடுத்தி சொல்வதில் வல்லவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்த தை மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது பொருளாதார நிலை உயரும் விதத்தில் கிரகங்கள் உலா வருகின்றன. தன ஸ்தானத்தில் இராகு, பஞ்சம ஸ்தானத்தில் இராசிநாதன் சுக்கிரன் இருப்பதால் சென்ற மாத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பானதாக இருக்கும். என்றே கருதலாம். ஜென்மத்தில் சனி இருப்பதால் எதையும் ஒரு முறைக்கு இரு முறை சிந்தித்து செய்வதே நல்லது.

குறிப்பாக, ஜென்ம சனியின் ஆதிக்க காலத்தில் உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். உற்சாகம் குறைபடாமல் பார்த்துக் கொள்வது நல்லது. குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம் தான். சனீஸ்வர வழிபாடும், அனுமன் வழிபாடும் இது போன்ற காலங்களில் முறையாக செய்து வந்தால், சந்தோஷ வாய்ப்புக்களை நாளும் சந்திக்கலாம்.

புதிய நண்பர்களை தேர்ந்தெடுக்கும் போதும், அவர்களிடம் பொறுப்புகளை கொடுக்கும் போதும் பொருத்தமானவர்கள் தானா என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். உங்கள் இராசிக்கு 4,5-க்கு அதிபதியாக சனி இருப்பதால் இந்த மாதம் ஏற்படும், அதன் வக்ர காலத்தில் உடல் நலத்திலும் கவனம் தேவை. உடனிருப்பவர்களிடம் பழகும் போதும் கூடுதல் விழிப்புணர்சி தேவை. செவ்வாயின் வக்ர காலத்தில் பணப்பற்றாக்குறை உருவாகலாம்.

புதன் உங்கள் இராசிக்கு 9,12க்கு அதிபதியாக விளங்குவதால், அதன் மகர சஞ்சாரத்தின் போது குடும்ப செலவு கூடும். எனவே, ஜனவரி 18-க்கு மேல் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வீட்டு முன்னேற்றம் கருதி ஒரு தொகையை செலவிடுவீர்கள்.

பெப்ரவரி 4-ம் திகதி கும்ப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். தாய்வழி உறவினர்களால் தனலாபம் கிடைக்கும். வாய் மொழியாக பேசிய ஒன்றை ஒப்பந்தம் செய்து கொள்வீர்கள். வருமானம் திருப்தி தரும்.

பெப்ரவரி 4-ம் திகதி அன்று சுக்ரனும் உச்சம் பெறுகிறார். சனியும் வக்ரம் பெறுகிறார். இராசிநாதன் உச்சம் பெறும் நேரத்தில் இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்ரம் பெறுவதால், இனம் புரியாத கவலை மேலோங்கும். பழைய கடன்களை அடைத்து விட்டு புதிய கடன்களை வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு ஏற்படும்.

இந்த மாதம் துர்க்கை வழிபாடு துயரங்களைத் தீர்க்கும். தனாதிபதி செவ்வாய் மாதத்தின் முதல் வாரத்திலேயே வக்ரமடைவது அவ்வளவு நல்லதல்ல. எனவே, சேமிப்புகள் கரையலாம். செவ்வாய் விரதமும் செல்வ நிலையை பாதுகாத்துக் கொள்ள வழிகாட்டும்.

இந்த மாதம் ஜென்ம சனியின் ஆதிக்கத்தால் உடல்நலத்தில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும். கணவன்- மனைவியர் இடையே கசப்பு உணர்ச்சி தோன்றாமல் இருக்க, அனுசரித்து செல்வது நல்லது. விரயங்கள் கூடலாம். அடுத்தவர்களின் பிரச்சனைகளில் தலையிடாமல் இருப்பது நல்லது. குழந்தைகள் நலன் கருதி ஒரு தொகையை செலவிடும் சூழ் நிலை உண்டு. உடன் பிறப்புகள் உங்களுடன் பகையாகலாம். கடன்சுமை குறைய ஏதாவது புது முயற்சிகள் செய்து பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்யலாமா? என்று நினைப்பீர்கள். மே மாதம் வரை பொறுமையாக இருப்பது நல்லது.

# சிவல்புரி சிங்காரம்

**விசாகம் 4 -ம் பாதம், அனுஷம், கேட்டை**

**நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்!**

**எதிலும் சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளை காண்கின்ற விருச்சிக இராசி நேயர்களே!**

மதியூகம் மிக்கவர்கள் நீங்கள். மக்கள் மத்தியில் உங்களுக்கு செல்வாக்கு அதிகமாகவே இருக்கும். இரக்க குணம் உங்களக்கு இயல்பாகவே இருந்தாலும், சில சமயங்களில் கோபத்தின் உச்சிக்குச் சென்று பின் விளைவுகளை சிந்திக்காமல் பேசி விடுவீர்கள். எண்ணங்களை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருந்தாலும், எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கியே இருக்கும்.

உங்களுக்கு இந்த தை மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, ஜென்மத்தில் இராகு, ஏழில் கேது இருப்பதால் தன வரவு தாராளமாக வந்து சேரும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். ஏழரை சனியின் ஆதிக்கம் உங்களுக்கு இனிய பலன்களையே வழங்கும்.

வெற்றிகள் ஸ்தானத்திற்கும், சுகஸ்தானத்திற்கும் அதிபதியாக சனி விளங்குவதால் இனிய பலன்களையே உங்களுக்கு வழங்கும். சுப விரயங்கள் அதிகரிக்கும் மாதமாகவும் இந்த மாதத்தை கருதலாம். சுக்கிரன் உச்சம் பெறும் நேரத்திலும், சனி வக்ரம் பெறும் நேரத்திலும் உங்களுக்கு இராஜ யோகம் தான். ஆனால், செவ்வாய் வக்ரம் பெறும் காலத்தில் எதையும் யோசித்து செய்வது நல்லது.

ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால், ஆரோக்கியம் சீராகலாம். அடுத்தவர்களுக்கு பொறுப்பு சொல்லும் போது, ஒரு கணம் யோசிப்பது நல்லது. விநாயகப் பெருமானை விடாது வழிபட்டால்,வெற்றிச் செய்திகள் வந்து சேரும்.

புதன் உங்கள் இராசிக்கு 8,11க்கு அதிபதியாக விளங்குகிறார். ஜனவரி 18-ம் திகதி அவர் மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே சகோதர ஒற்றுமை பலப்படும். உடன் பிறப்புகள் உதவிக் கரம் நீட்டுவர். விட்டுச்சென்ற ஒப்பந்தங்கள் மீண்டும் வந்து சேரும். வீடு மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். திட்டங்கள் அனைத்தும் வெற்றிபெற இந்தக் காலத்தில் திருமாலை வழிபடுவது நல்லது.

பெப்ரவரி 4-ம் தேதி கும்ப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக வீடுகட்டும் முயற்சி துரிதமாக நடைபெறும். வீட்டில் உள்ளவர்களின் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். வாகன மாற்றங்களும் ஒரு சிலருக்கு உறுதியாகலாம். தாய்வழி ஆதரவு பெருகும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழிலில் பெரிய அளவிற்கு முதலீடு செய்ய முன்வருவீர்கள்.

பெப்ரவரி 4-ம் திகதி மீன இராசியில் சுக்கிரன் உச்சம் பெறப் போகிறார். அதே நேரத்தில் முன்னாதாகவே, இராசிநாதன் செவ்வாய் வக்ரம் பெறுகிறார். 12க்கு அதிபதி உச்சம் பெற்றும், 6க்கு அதிபதி வக்ரம் பெற்றும் இருப்பதால், எதிர்பாராத சில நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்துசேரும். ஆடை, ஆபரண சேர்க்கை அதி கரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுக்கும் முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும். கடிதம் கனிந்த தகவல்களை கொண்டு வந்து சேர்க்கும்.

இந்த மாதம் முருகப்பெருமான் வழிபாட்டை, செவ்வாய் தோறும் மேற்கொள்வதோடு, பிரதோஷத்தன்று நந்தீஸ்வரர், உமாமகேஸ்வரரையும் வழிபட்டுவாருங்கள். எந்தநாளும் இனிய நாளாக அமையும்.

இந்த மாதம் சுபவிரயங்கள் அதிகரிக்கும் மாதமாகும். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குருவின் பார்வை குடும்ப ஸ்தானத் தில் பதிவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொடுக்கல், வாங்கல் ஒழுங்காகும். ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் கணவன்-மனைவிக்குள் அனு சரிப்புத் தேவை. பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரலாம். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரும். காகவானத்தானை வழிபடுவது நல்லது.





(தொடரும்)

* * *

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 15

## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்



யுத்தத்தின் தொடக்கத்தில் பாசிச ஜேர்மனியின் படைத் தலைமை போலந்தின் மேற்கு எல்லையில் பெரும் சக்திகளைக் குவித்தது. இவற்றில் 62 டிவிஷன்கள் ( 7டாங்கி மற்றும் 4 மோட்டார் டிவிஷன்கள் உட்பட), 2800 டாங்கிகள், 6000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள் சுமார் 2000 விமானங்கள் (முதலாவது, நான்காவது வான்படைகளைச் சேர்ந்தவை) முதலியன அடங்கியிருந்தன. மொத்தம் 16 இலட்சம் பேர் இருந்தனர். இவை "வடக்கு" படைத் தொகுதியிலும், (3-வது படை-கிழக்கு பிரஷ்யாவில், 4-வது படை- போமெரானியாவிலும்) "தெற்கு" படைத் தொகுதியிலும் (8,10,14-ஆவது படைகள் சிலேஸீயாவில்) இடம் பெற்றிருந்தன. "வடக்கு" படைத் தொகுதிக்கு கர்னல் ஜெனரல் ருண்டிஷ்டேட்டும் தலைமை தாங்கினர்.

போலந்துடனான யுத்தத்திற்காக ஒதுக்கப்பட்ட பாசிச ஜேர்மனியின் கடற்படையில் 2 போர்க் கப்பல்களும்7 நீர்மூழ்கிக் கப்பல்களும் நாசகா்ரி கப்பல் படைப்பிரிவும் இழுவைப்படகு யூனிற்றும் கடற் படை விமானப் பிரிவும் அடங்கியிருந்தன. இது தவிர ஸ்வினே மியூண்டில் (ஸ்வினோ ஊஸ்தியே) செயலில் இறங்கத்தயாரான நிலையில் 3 குருசர் கப்பல்களும் பில்லாவுவில் (பால்டீய்ஸ்க்) நாசகாரிக் கப்பல் படைப்பிரிவும் டர்பேடோ படகுகள் தொகுதியும் நின்றன. போலந்தின் கடற் படைத்தளங்களைச் சுற்றி வளைப்பது, இதன் கடற்படையை ஒழிப்பது, நடுநிலை நாடுகளுடன் போலந்திற்குள்ள கடல்வர்த்தகத்தைக் குலைப்பது, கிழக்குப் பிரஷ்யா, சுவீடன் மற்றும் பால்டிக் கரையோர அரசுகளுடன் பாதுகாப்பான கடல்வழித் தொடர்புகளுக்கு வகை செய்வது ஆகியனதான் கடற் படையின் முன்னிருந்த கடமைகளாகும்.

பாசிச ஜேர்மனிய துருப்புக்களை போலந்து இராணுவம் எதிர்த்து நின்றது. இதன்வசம் 39 காலாட் படை டிவிஷன்களும் 11 குதிரைப் படை பிரிகேட்டுக்களும் 3 மலையேற்ற பிரிகேட்டுக்களும் 2 கவச மோட்டார் பிரிகேட்டுக்களும் சுமாராக 80 தேசிய பாதுகாப்பு பட்டாலியன்களும் இருந்தன. மொத்தமாக 10 இலட்சம் போர்வீரர்கள் இருந்தனர். **1939- ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி இதன்வசம் 220 எளிய டாங்கிகளும் 650 சிறு பீரங்கி ஏந்திய டாங்கிகளும் கவச மோட்டார் வாகனங்களும் 4 ஆயிரத்து 300 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 800 போர் விமானங்களும் 16 போர்க்கப்பல்களும் உதவிப்படகுகளும் இருந்தன.**



பல்வேறு ஐரோப்பிய தேசங்களிலிருந்தும் ஜூதர்களை ஹிட்லரின் நாஜிப்படைகள் போலந்துக்குள் கொண்டு வந்த இரயில் ... நுழைவாயில்

ஆனால், போலந்து படை தலைமையால் இராணுவத்தைப் போர் நடவடிக்கைகளுக்கு தயார்ப்படுத்தவும், தேவையான படைத் தொகுதிகளாக பிரிக்கவும், இயலவில்லை. அணி திரட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டது. அணிதிரளும் கட்டளை ஆகஸ்ட் 31 ஆம் திகதிதான், அதாவது யுத்தம் ஆரம்பிப்பதற்கு முதல்நாட்தான் பிறப்பிக்கப்ட்டது; இந்நேரத்தில் முழுவதுமாக அணி திரட்டப்பட்ட பாசிச ஜேர்மனியத் துருப்புக்கள் படையெடுக்கத் தயார் நிலையில் இருந்தன. தற்காப்பு அணிகளில் போலந்து படைத் தலைமையால் 24 காலாட்படை டிவிஷன்களையும் 56 தேசிய பாதுகாப்பு பட்டாலியன்களையும் மட்டும் தான் நிறுத்த முடிந்தது.



இரயிலில் ஏற்றப்படுதற்காக நாஜிகளின் முகாமில் இருத்தி வைக்கப்பட்டுள்ள யூதர்கள்

இச்சக்திகள் எல்லாம் மேற்கேயிருந்த எல்லை வட்டாரங்களில் பரவலான அரைவட்டத்தில் அமைந்திருந்ததால் போலந்துத் துருப்புகள் சிதறிப்போயிருந்தன. ஓரிடத்தில்கூட தெளிவான பலம்கொண்ட படைத் தொகுதிகள் இருக்கவில்லை.

பெரும் இடைவெளிகள் விட்டு, பரஸ்பர பீரங்கி தொடர்பின்றி இருந்த எதிர்ப்பு முடிச்சுகளும் ஆதார தளங்களும்தான் போலந்து தற்காப்பின் அடிப்படையாக விளங்கின. மேலும் காலாட்படை டிவிஷன் இருந்த இடத்தில் டாங்கி எதிர்ப்புச் சாதனங்கள் ஒரு கி.மீ. போர் முனைக்கு இரண்டிற்கும் மேற்படாத விதத்தில் மிகவும் குறைவாக இருந்ததால் மேலே கூறிய சக்திகளையும் எளிதாக சுற்றி வளைத்துச் செல்ல முடிந்தது.

போலந்தின் கடற்படையில் நான்கு நாசகாரிக் கப்பல்களும் (இவற்றில் 3 பிரிட்டனுக்குச் சென்றுவிட்டன), 5 நீர்மூழ்க்கிக் கப்பல்களும் ஒரு கண்ணிவெடி வைக்கும் கப்பலும் ஆறு இழுவைப் படகுகளும் துணைக் கப்பல்களும் ஒரு சில கரைப்பாதுகாப்பு பட்டாலியன்களும் கடல்விமானப் படையும் இருந்தன. கிதீனியா கப்பற் படைத்தளம் மற்றும் ஹேல் தீபகற்பத்தின் பாதுகாப்பிற்கு வகை செய்வது, இறங்கு படைகள் இறங்கத் தடைசெய்வது, எதிரியின் கப்பல்களுடன் போரிடுவது, கண்ணி வெடிகளை வைப்பதுமாகியன தான் கப்பற் படையின் கடமைகளாக இருந்தன.

**சக்தியிலும் சாதனங்களிலும் ஹிட்லர் படைகள் கணிசமான அளவு விஞ்சி நின்றதை பார்க்கும் போது இவையெல்லாம் போலந்து இராணுவத்தை மிகக் கடுமையான நிலையில் வைத்தன.**

பாசிச ஜேர்மனியின் படைத் தலைமை இரண்டு தாக்குதல்களைத் தொடுக்க திட்டமிட்டது. பிரதான



ஹிட்லர்

தாக்குதலை 3-வது படையைக் கொண்டு கிழக்கு பிரஷ்யாவிலிருந்தும், இரண்டாவது தாக்குதலை 10-வது படையைக் கொண்டு சிலேஸியாவிலிருந்து வீஸ்லா மற்றும் நாரேவ் ஆறுகளின் மேற்கே இருந்த போலந்து இராணுவத்தின் முக்கிய சக்திகளை சுற்றி வளைத்து முறியடிக்கும் பொருட்டு வார்ஸாமீது ஒன்றிணையும் திசைகளில் தொடுப்பது.

இத்தாக்குதலைத் திடீரென தொடங்கும் பொருட்டு பாசிஷ்டுக்கள் சில மூடு தந்திர பாசாங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். கிழக்குப்பிரஷ்யாவில் நடந்த சமரின் 25 -வது ஆண்டு விழாவில் பங்கேற்பது எனும் சாக்கின் கீழ் போர்க்கால எண்ணிக்கையை அடைந்திருந்த நிரந்தர டிவிஷன்கள் வடக்கு படைத் தொகுதி போர்த்தந்திர ரீதியாக நிறுத்தப்பட்டிருந்த பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டன. இலையுதிர்கால



போலந்தை ஹிட்லர் வெற்றி கொண்ட போது

ஒத்திகைகள் எனும் சாக்கின் கீழ் சாதாரண காலாட்படை மற்றும் மோட்டார் டிவிஷன்கள் போலந்தின் எல்லைகளின் அருகே கொண்டு வரப்பட்டன.

ஆகஸ்ட் 31 ஆம் திகதி போலந்து எல்லையின் அருகேயுள்ள ஜேர்மன் நகரமாகிய கிலேய்விட்சில் ஆத்திர மூட்டும் பாசிச சம்பவம் ஒன்று நடைபெற்றது. இச்சம்பவம் போலந்தின் மீது படையெடுப்பதற்கான சம்பவமாக பாசிஷ்டுகளால் பயன் படுத்தப்பட்டது.

வி.அ.மத்சுலேன்கோ

(தொடரும்)

## நூற்றாண்டு விழாவில்
## ஜீ.எல்.பீரிஸ் பங்குபற்றாமை குறித்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஏமாற்றம்

தென்னாபிரிக்காவின் ஆளும் கட்சியான ஆபிரிக்க தேசிய காங்கிரசின் நூற்றாண்டு விழாவில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பங்குபற்றாமை குறித்து அக்கட்சியின் தலைவர்கள் ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விழாவில் பங்குபற்றுமாறு உலகத் தமிழர் பேரவைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதால் வெளிவிவகார அமைச்சர் பீரிஸை இவ்விழாவுக்கு இலங்கை அரசாங்கம் அனுப்பவில்லை.

மாறாக தென்னாபிரிக்காவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷெஹான் ரட்னவேல் இதில் பங்குபற்றினார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இவ்விழாவில் பங்குபற்றியதுடன் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்துரையாடல்களையும் நடத்தியது.

இக்கலந்துரையாடலின் போது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள் மேற்படி அதிருப்தியை வெளியிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## சிறுவர் துன்புறுத்தல் பிணை வழங்கும் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர நடவடிக்கை
### அனோமா திசாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

சிறுவர்களை துன்புறுத்தலுக்கு உட்படுத்தும் நபர்களுக்கு பிணை வழங்கும் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான யோசனையை அடுத்த வாரத்தில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக அதிகார சபையின் தலைவரும் சட்டத்தரணியுமான அனோமா திசாநாயக்க தெரிவிக்கின்றார்.

சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக இந்த சட்டதிருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக அனோமா திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

வழக்கு விசாரணைகளுக்கு நீண்டகாலம் எடுப்பதால் அவற்றிலிருந்து குற்றவாளிகள் இலகுவாக தப்பித்துக் கொள்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திறமையான சட்டத்தரணிகள், குற்றவாளிகளுக்கு சார்பாக வழக்காடி விடுதலை பெற்றுக்கொடுப்பதால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு எவ்வித நியாயங்களும் கிடைப்பதில்லை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மிகவும் குறுகிய காலப்பகுதியில் சிறுவர்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபர் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும் சிறுவர்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபர்களுக்கு விரைவில் தண் டனை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அதிகாரசபை கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதாக அனோமா மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு உளப்பாங்கு சீர்திருத்த பயிற்சி
### சமூக அலுவல்கள் பணிப்பாளர் தெரிவிப்பு

இடம்பெயர்ந்த மாணவர்களின் நலன் கருதி சமூக அபிவிருத்திக்கான உளப்பாங்கு சீர்திருத்த முகவர் பயிற்சிக் கருத்திட்டமொன்று அடுத்த வாரம் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை கிளிநொச்சி நகரை மையமாகக் கொண்டு இந்த சமூக பயிற்சி கருத்திட்டம் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி சமூக அலுவல்கள் பணிப்பாளர் நந்தன விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கருத்துருவின் ஓர் கட்டமாக மோதல் இடம்பெற்ற பகுதிகளிலும் கஷ்டப் பிரதேசங்களிலும் வாழும் சகல இன மாணவர்களும் நன்மைபெறும் விதத்தில் இந்தத் திட்டம் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஏற்கனவே பயிற்சி கருத்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெண்கள் மீதான துன்புறுத்தல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் பெண்கள் பிரிவான லக் வனிதா அமைப்பினர் நேற்று முன்தினம் நாவலையிலுள்ள சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

## ஆதன வரிகளை செலுத்துமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா நகர சபைக்குட்பட்ட ஆதனவரி செலுத்துவோர் தமது ஆதன வரிகளை செலுத்துமாறு வவுனியா நகர சபையின் தலைவர் ஐ.கனகையா தெரிவித்துள்ளார். அத்துடன் துவிச்சக்கரவண்டி பாவனையாளர்கள் மற்றும் முச்சக்கரவண்டி பாவனையாளர்களும் இவ்வாண்டுக்கான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டுளிலும் பலர் ஆதன வரிகளை செலுத்தாதுள்ளமையினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டியுள்ளதாகவும் தெரிவித்த அவர், இவ்வாண்டுக்கான ஆதனவரிகளை ஆண்டின் முதல் மாதத்தில் செலுத்துவதன் ஊடாக 10 சதவீத ஆதனவரி கழிவினை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, துவிச்சக்கரவண்டிகள் மற்றும் முச்சக்கரவண்டிகளுக்கான பதிவினை மேற்கொண்டு இலக்கத்தகட்டினையும் அனுமதி பத்திரத்தினையும் பெற்றுக்கொள்வதன் ஊடாக சிரமங்களை குறைத்துக் கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## சஜித்தின் ஒத்திவைப்பு பிரேரணை நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றில் கொண்டு வர இருந்த ஒத்திவைப்பு பிரேரணை சபாநாய்கரால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஒரே விடயங்கள் குறித்து பாராளுமன்றில் மீண்டும் மீண்டும் விவாதிக்க முடியாது என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவித்துவிட்டார்.

உயர்தரப் பெறுபேறுகள் தொடர்பில் சபை ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றை நேற்று முன்வைக்க சஜித் பிரேமதாச திட்டமிட்டிருந்தார்.

ஆனால், குறித்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்தினம் கருத்துக்களை முன்வைக்க அதற்கு அரசு தரப்பில் பதில்களும் வழங்கப்பட்டாகிவிட்டதென சபாநாயகர் கூறியுள்ளார். (அ-2)

## கனடா மறுவாழ்வு அமைப்பினால் விவசாயிகளுக்கு உபகரணங்கள்

(கொழும்பு)

வன்னியில் வாழ்வாதாரங்களை இழந்து இடைத்தங்கல் கொட்டில்களில் அல்லப்படும் எமது மக்களது அவலத்தை எண்ணிப் பார்த்து அவர்களின் வாழ்வாதாரத்தை வழமை நிலைக்கு கொண்டுவர நாம் முன்னிற்க வேண்டும் என கனேடிய படைப்பாளிகள் கழகத்தின் தலைவர் தங்கவேலு நக்கீரன் தெரிவித்துள்ளார்.

சிங்கள அரசு வன்னி மக்களை கை விட்டுவிட்டது. புலம்பெயர் தமிழர்களே இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் எனவும் அவர் உரை நிகழ்த்தியுள்ளார்.

கனேடியப் படைப்பாளிகள் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ்ப்புத்தாண்டு நிகழ்வு மற்றும் தைப்பொங்கல் நிகழ்வில் வன்னி மக்களுக்கு முன்மாதிரியாக மேற்கொள்ளப்பட்ட நிதி சேகரிப்பின்படி சுமார் ஆயிரத்து 500 டொலர்கள் அந்நிகழ்விலேயே சேர்க்கப்பட்டு கனடா மறுவாழ்வுக் கழகத்திடம் வழங்கப்பட்டது.

நாங்கள் எங்களது நற்தினங்களை கொண்டாடும் போது அல்லலுறும் எமது மக்களின் வாழ்வாதாரத்திற்கும் உதவிபுரிய வேண்டுமென்பதை இனித் தொடர்ச்சியாக கடைப்பிடிக்கும் முன்மாதிரியை தமிழ்ப்படைப்பாளிகள் கழகம் தொடர்ந்து கடைப்பிடிக்கும் என நக்கீரன் தங்கவேலு தெரிவித்தார்.

அண்மையில் மறுவாழ்வு அமைப்பு கிளிநொச்சி மாவட்டக் கமக்காரர்களுக்கு 104 மண்வெட்டிகளை அன்பளிப்புச் செய்தது.

ஆணைவிழுந்தான் ஊர் மக்களுக்கு ஆறு தையல் பொறிகள் அன்பளிப்புச் செய்தது.

எனவே, இந்த உதவியை செய்ய எல்லோரும் முன்வர வேண்டும் என விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க மக்கள் இந்த நிதித்தொகையை வழங்கினர். (அ-2)

## அமெ.சட்ட அமுலாக்கல் குழுவுடன் கோத்தபாய சந்திப்பு

அமெரிக்க லொஸ் ஏஞ்சலசின் சட்ட அமுலாக்கல் சபையினர் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்துள்ளனர்.

லொஸ் ஏஞ்சலசின் சட்ட அமுலாக்கல் அதிகார சபையின் தலைவர் மற்வூல்மன் தலைமையிலான குழு ஒன்று நேற்று முன்தினம் பாதுகாப்பு செயலாளரை சந்தித்து இரண்டு தரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடல்கள் இடம் பெற்றதாக இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் சட்ட அமுலாக்கல் விடயத்தில் இரண்டு நாட்டு அனுபவங்களும் இதன்போது பரிமாறிக் கொள்ளப்பட்டதாக அமைச்சு குறிப்பிடுகின்றது. (அ-2)

# தமிழ்மொழி தெரியாத அரச ஊழியர்களுக்கு தமிழ்மொழி வகுப்புக்கள் நடத்த ஏற்பாடு

## ஊடகத்துறை அமைச்சின் செயலாளர்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய சகல அரசாங்க நிறுவனங்களிலும் உள்ள தமிழ் தெரியாத ஊழியர்கள் அனைவருக்கும் தமிழ் வகுப்புக்களை நடத்தவேண்டும் என்று சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் தங்களுக்கு கீழ்வரும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் பொறுப்பதிகாரிகளுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊடகத்தகவல்துறை அமைச்சின் செயலாளர் டபிள்யூ பி.கணேகல, லேக் ஹவுஸ் நிறுவனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் ஆகியன உட்பட தமது அமைச்சின் கீழ் செயற்படும் 17 நிறுவனங்களின் தலைவர்களுக்கும் பொறுப்பதிகாரிகளுக்கும் கடிதங்களை அனுப்பிவைக்க முடிவெடுத்துள்ளார்.

நாட்டில் இனங்களுக்கிடையே புரிந்துணர்வு இல்லாதிருப்பதற்கும் ஒருசாரார் ஏனையவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் இருப்பதற்கும் ஏனையவர்களின்மொழி தெரியாமல் இருப்பதே பிரதான காரணமாகும்.

இந்தப் பிரிவினையை உருவாக்கியது இலங்கைத் தலைவர்கள் அல்ல. நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களே. பெரும்பான்மை மக்களையும் சிறுபான்மை மக்களையும் பிரித்து வைத்து தங்கள் அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கு மேற்கொண்ட சாதுரியமான சதித்திட்டமே இதற்கான பிரதான காரணமாகும் என்று ஊடகதகவல்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர், சுதந்திரம் பெற்ற பின்னர் அதிகாரபீடத்தில் அமர்ந்த நம்நாட்டு அரசியல் தலைவர்கள் கூட இது விடயத்தில் எவ்வித ஆக்கபூர்வமான தீர்மானங்களை எடுக்காது தமிழ்பேசும் மக்களையும் சிங்களம் பேசும் மக்களையும் இரண்டு துருவங்களைப்போல் பிரித்துவைத்தே அரசியல் நடத்தினார்கள்.

சில தலைவர்களின் இந்தச் செயற்பாட்டினை தமிழ்த்தலைவர்களும் தங்களுக்கு குறுகிய அரசியல் இலாபத்தை பெறமுடியுமென்ற காரணத்தினால் இந்தப் பிரித்தாளும் செயற்பாட்டுக்கு தூபமிடக்கூடிய வகையில் அரசியலை நடத்திவந்தார்கள் என்றார்.

இதேவேளை யுத்தம் முடிபடைந்து நாட்டில் சமாதானமும் நல்லிணக்கப்பாடும் இனங்களிடையே நட்புறவும் வலுப்பெற்றுவரும் இன்றைய சூழ்நிலையில் நாடு பொருளாதாரத் துறையிலும் மற்றும் எல்லாத்துறைகளிலும் முன்னேற்றமடையவேண்டுமாயின் இந்நாட்டு பிரஜைகள் அனைவருக்கும் மும்மொழி அறிவு இருக்க வேண்டும். இந்த கொள்கையை கடைப்பிடிப்பதன் அவசியத்தை புரிந்துகொள்ள ஜனாதிபதி இந்த மும்மொழிக் கொள்கையை அமுலாக்கும் பொறுப்பை சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான வாசுதேவ நாணயக்காரவிடம் ஒப்படைத்திருக்கிறார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் ஆரம்பத்தில் தமிழ் ,சிங்கள, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்றுக் கொள்ள கஷ்டமாக இருந்தாலும் பாடசாலை மட்டத்தில் எல்லாப் பிள்ளைகளுக்கும் இந்த மும்மொழிகளையும் கற்பிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை தொழில் பார்ப்பவர்கள் குறிப்பாக அரசாங்க ஊழியர்கள் அவசியமாயின் மும்மொழி அறிவை பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அவர்களில் அனைவரும் இருமொழி அறிவை அதாவது தமிழிலும் சிங்களத்திலும் சரளமாக தங்கள் அரச கருமங்களை செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுடன் நேரடியாக சம்பந்தப்படும் வைத்திய்சாலை ஊழியர்கள், தபால் நிலைய ஊழியர்கள், வங்கி ஊழியர்கள் மற்றும் நீதிமன்றங்களில் பணியாற்றுபவர்களும் தமிழிலும் சிங்களத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்று அமைச்சர் கேட்டுள்ளார்.(அ-2)

# விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

முதலாவது இராணுவ நீதிமன்றம் தனக்கெதிரான வழக்கில் அளித்த தீர்ப்புக்கு எதிராக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல்செய்த மனுமீதான விசாரணையை எதிர்வரும் பெப்ரவரிமாதம் முதலாம் திகதிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைவர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் இம்மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது மேற்படி அறிவிப்பு வழங்கப்பட்டது. (அ-2)

# மனோகணேசன்-முசம்மில் ஒப்பந்தம் கைச்சாத்து


ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனுக்கும் கொழும்பு மாநகரசபை மேஜர் ஏ.ஜே.எம். முசம்மிலுக்கும் இடையில் நேற்று புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரை அபிவிருத்தி செய்தல், தமிழ்மொழி அமுலாக்கலைப் பரந்த வகையில் நடைமுறைப்படுத்தல், வீதி புனரமைப்பு, நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல், நகரின் குப்பை கூழங்களை அகற்ற சிறந்த முகாமைத்துவத்தை பேணுதல் மற்றும் பொது மக்களின் சட்டரீதியான கட்டடங்களை அகற்றுவதை தவித்தல் உள்ளிட்ட ஐந்து விடயங்களை உள்ளடக்கியதாகவே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாநகரசபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியதையடுத்து ஏ.ஜே.எம். முசம்மிமில் மேஜராகத் தெரிவு செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து அவர் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஆதரவையும் கோரியிருந்தார்.

இதற்கு சாதகமாக பதிலளித்திருந்த மனோகணேசன் கொழும்பு நகர அபிவிருத்தி மற்றும் தமிழ் மக்களின் மேம்பாடு தொடர்பில் இணைந்து செயற்பட தாம் ஆதரவளிப்பதாக் கூறியிருந்ததன் பின்னர் இவ் ஒப்பந்தம் இடம்பெற்றுள்ளது. (அ-2)

# அரசியலில் களமிறங்கும் திட்டம் எதுவும் கிடையாது



## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலில் களமிறங்கும் திட்டம் எதுவும் கிடையாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எவர் சொன்னாலும் எவர் நினைத்தாலும் அரசியலில் ஈடுபடும் உத்தேசம் தமக்குக் கிடையாது. அரசியலில் ஈடுபடுமாறு பலர் அழைப்பு விடுத்தபோதிலும் அவற்றை நிராகரித்ததாக பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலில் ஈடுபடுமாறு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் பாதுகாப்புச் செயலாளரிடம் கோரியுள்ளார். இதன்போது தம்மை பாதுகாப்புச் செயலாளர் பதவியிலிருந்து விலக்குவதற்கு முயற்சிக்கின்றார்களா என்று கோத்தபாய ராஜபக்ஷ லலித் வீரதுங்கவிடம் வினவியதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# பௌத்த தர்மத்திற்கு முன்னுரிமை வழங்குவதை எவரும் விமர்சிக்க முடியாது-மனோஹர டி சில்வா

பௌத்த தர்மத்தின் மீது விமர்சனங்களை முன்வைக்க ஆயர்களுக்கு எவ்வித உரிமையுமில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, கற்றுக் கொள்ளாத பாடங்கள் என்ற தலைப்பில் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சமாதான உடன்படிக்கை மீறப்பட்டதால் நாடு எதிர்நோக்கிய பிரச்சினைகளை ஆராயும் அதிகாரத்தை ஜனாதிபதி நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு வழங்கினார். எனினும் ஆணைக்குழு தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறி நாட்டில் இனப்பிரச்சினை ஒன்று இருப்பதாக கூறியுள்ளார்.

இலங்கையில் உள்ள பெரும்பான்மை இனம் நாட்டில் ஏனைய சிறுபான்மை இனங்களை கவனித்துக் கொள்ளாது புறந்தள்ளும் இனமாக கருதியுள்ளது. சிங்கள பௌத்த மக்களுக்கு நாட்டில் முதன்மை இடம்வழங்கப்படுவது குறித்து அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பாக நாட்டின் அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ளமையே அனைத்து பிரச்சினைகளுக்கு மூலகாரணம் என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆணைக்குழுவின் முன் வழங்கிய சாட்சியத்தின்போது தெரிவித்திருந்தார். பௌத்த பாடசாலைகளுக்கு நல்லிணக்க ஆணைக்குவின்மூலம் விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது. பௌத்த பாடசாலைகளின் பௌத்த அடையாளங்களை பாதுகாக்கவும் கத்தோலிக்க பாடசாலைகளின் கத்தோலிக்க அடையாளங்களை பாதுகாக்கவும் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

இது சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும். இங்கிலாந்தில் அங்கிலிக்கன் திருச்சபை இருப்பது போல ரஷ்யாவில் வைதீக திருச்சபை உள்ளது. இதனால் இலங்கையில் பௌத்த தர்மத்திற்கு முன்னுரிமை வழங்குவதை எவரும் விமர்ச்சிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



யாழ். ஆனைப்பந்தி மெ.மி.த.க. வித்தியாலய முதலாம் வகுப்பு மாணவர்களின் கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றபோது தரம் 2 மாணவர்களால் தரம் ஒன்று மாணவர்களுக்கு மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# ஜெயலலிதா பிரதமர் ஆகவேண்டும்

சட்டமன்றத் தேர்தல் முடிந்து எட்டு மாதங்கள் கூட முடிவடையாத நிலையில், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு அச்சாரம் போடும் விழாவாக அமைந்துவிட்டது, துக்ளக் ஆண்டு விழா!


ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் பண்டிகைக்கு முதல்நாள் துக்ளக் பத்திரிகையின் ஆண்டு விழா நடைபெறுவது வழக்கம். இது 42-ஆவது அண்டு விழா. முன்னாள் துணைப் பிரதமர் அத்வானி, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி ஆகிய இருவரும் இந்த ஆண்டு வந்திருந்தது, அரசியல் பதற்றத்தை ஆரம்பித்து வைத்தது.

சோ, மேடை ஏறியதும் அத்வானி, மோடி ஆகியோரும் வர, "பாரத் மாதா கிஜே" என்று கோஷம் எழுந்து அடங்கியது. முதல் நிகழ்ச்சியாக வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் சொன்னார் சோ. முதலில், கல்பனா என்ற பெண் கேள்வி கேட்க அழைக்கப்பட்டார்.

"எத்தனையோ பேர் இருக்க... முதலில் ஒரு பெண்ணைக் கேள்வி கேட்க அழைத்து இருக்கிறேன். பெண் உரிமைக்கு முக்கியத்துவம் கொடுப்பவன் நான்...." என்றார் சோ. பெண் உரிமை விவகாரங்களில் அடிக்கடி தலை உருட்டப்படும் சோ, இப்படிச் சொன்னதும், அரங்கம் எங்கும் சிரிப்பலை. சோ பேச ஆரம்பித்த நேரத்தில் வந்து சேர்ந்த ரஜனியை, மோடியும் அத்வானியும் எழுந்து கட்டிப்பிடித்துக் கை குலுக்கினார்கள்.

மேடை ஏறிய கல்பனா, "உங்கள் நெருங்கிய நண்பர் ஜெயலலிதாவால் இலவசங்களை ஒழிக்க முடியாதா?" என்று கேட்டார்.

"கடந்த தேர்தலில் அ.தி.மு.க. இலவசத்திட்டங்களை அறிவிக்காமற் போனால், தி.மு.க. ஆட்சி தொடர்ந்திருக்கும். ஜெயலலிதாவின் நண்பர் என்பதற்காக எந்தப் பழியையும் என்மேல் போட்டுவிடாதீர்கள். நான் வெறும் பார்வையாளன் மட்டுமே. இலவசங்களுக்கு மக்களைப் பழக்கிவிட்டார்கள். அதனால், ஜெயலலிதா




மோடியுடன் சோ

## தமிழகப் பார்வை


இலவசத்திட்டங்களை அறிவித்தது சரியான காரியம்தான். அரசியல் உத்திக்காகச் செய்யப்பட்ட விடயம் அது. அறிவிப்போடு நின்றுவிடாமல் அதை நிறைவேற்றவும் ஆரம்பித்திருக்கிறார்" என்று பதில் சொன்னார் சோ.

அடுத்து கருணாநிதி பற்றி "படங்களில் எம்.ஜி.ஆர் ஐப்பற்றி பேசும் போது நாகேஸ் பற்றியும் பேசுவோம் அதுபோல கருணாநிதியைப்பற்றி பேசாமல் இருக்க முடியாது. சட்டசபைத்தேர்தலில் தேர்தல் கமிசன் பாரபட்சமாக நடக்கிறது" என்றார். அதன்பின் "தோல்விக்கு நானே காரணம் பின்பு கூடாநட்புக் கேடாய் முடியும் என்று மாறிமாறிப் பேசினார். "பார்பனர் சூழ்ச்சி" என்றார். ஜெயலலிதாவோடு கூட்டணி சேர்ந்த விஜயகாந், தா. பாண்டியன் சாஸ்திரிகள், ஜவாஹிருல்லா தீட்சிதர் ஆகியோரைத்தான் பார்ப்பனர் சூழ்ச்சி என்கிறாரா? "ராஜீவைக் கொன்றவர்களை ராஜீவ் காந்தி உயிருடன் இருந்தால் மன்னித்திருப்பார்" என்று சொன்ன கருணாநிதியின் பகுத்தறிவு இதுவரைக்கும் எனக்குப் புரியவில்லை. கட்சிக்குப் பிரச்சினையென்றால், அதாவது அவருடைய குடும்பத்திற்குப் பிரச்சினையென்றால், உடனே செயற்குழு, பொதுக்குழுவைக் கூட்டிவிடுவார்" என்று சொன்னதும் மீண்டும் சிரிப்பலை!



மேடையில் அத்வானி

பொதுவாக ஜெயலலிதாவை ஆதரித்துக் கருத்துக்களைச் சொல்வார் சோ. ஆனால், இந்த முறையும் அவரைப் புகழ்ந்து அதிக நேரம் பேசினார். "ஜெயலலிதாவைப் போல தினமும் தலைமைச் செயலகத்திற்குச் சென்று உழைக்கக் கூடிய ஒரு முதல்வரைப் பார்த்தது இல்லை. தவறு என்று தெரிந்துவிட்டால் அவரைப் போல தைரியமாக யாராலும் நடவடிக்கை எடுக்க முடியாது. மோடி மாதிரி... குஜராத் மாதிரி இங்கே ஆட்சி நடைபெற வேண்டும் என்ற ஆசை அவர் மனதில் இருக்கிறது. அதற்கு தொடர்ந்து ஜெயலலிதா 10 ஆண்டுகளாவது ஆட்சியில் இருந்தால்தான் தமிழகத்துக்கு நிறைய நன்மைகள் கிடைக்கும். தேசபக்தி, கடின உழைப்பு, பல மொழிகள் பேசும்திறன் எனப் பன்முகத் திறன்கள் ஜெயலலிதாவிடம் இருக்கின்றன. மத்தியில் அடுத்து அமையப்போகும் புதிய ஆட்சியை உருவாக்கும் பணியில் அ.தி.மு.க.வுக்கு நிச்சியம் பங்கிருக்கும். மத்தியில் பி.ஜே.பி அல்லாத, அது ஆதரிக்கும் கட்சி ஆட்சிக்கு வருவதாக இருந்தால்... ஜெயலலிதா பிரதமராக வர வேண்டும். அதற்கு பி.ஜே.பி. உதவி செய்யும்" என்றவர் சசிகலா விவகாரத்தை லேசாகத் தொட்டார்.



நிகழ்ச்சியில் ரஜினி

"ஒரு தவறு நடக்கிறது என்றால், அதன்மீது ஜெயலலிதா எவ்வளவு துணிச்சலாக நடவடிக்கை எடுக்கிறார் என்பதற்கு நல்ல உதாரணம் சசிகலா

## சோ சொல்கிறார்!

குடும்பத்தினரைக் கட்சியில் இருந்து நீக்கியது. இது நல்லதொரு சத்திர சிகிச்சை. இந்தத் துணிச்சல் ஜெயலலிதாவுக்கு மட்டுமே உண்டு" என்கிறார்.

அடுத்துப் பேசிய அத்வானி, "ஜெயலிலதா ஆட்சி நடக்கும் போது நானும் மோடியும் இங்கே வந்திருப்பது அரசியல் வட்டாரத்தில் யூகங்களை எழுப்பி இருக்கிறது. பி.ஜே.பி.க்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையே இயற்கையான கூட்டணி அமைந்துள்ளது என்பதை ஆரம்பத்திலிருந்தே சொல்லி வருகிறேன். பி.ஜே.பி. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அ.தி.மு.க அங்கம் வகிக்கவில்லை என்றாலும் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் எங்களுக்கு ஆ.தி.மு.க. முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறது. அதனால், இது இயல்பான கூட்டணி. இப்படிச் சொல்வதால் அரசியல் தந்திரம் என்று நினைத்துவிடாதீர்கள். ஜெயலலிதா, நரேந்திர மோடி ஆகியோரைப் போன்ற மாற்றம் ஏற்படுத்தக்கூடிய தலைவர்கள் நம்நாட்டுக்குத் தேவை.

தமிழர்களால் கொண்டாடப் படும் பொங்கல் திருநாள் மாற்றத்தின் அடையாளத்தைக் குறிப்பதாகும். அந்த வகையில் சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பயணிக்கத் தொடங்கியிருக்கும் நாள் இது. எனவே, இந்திய அரசியலில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும் ஆண்டாக அமையும். மத்தியில் இருக்கும் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியைப்போல ஒரு ஊழல் நிறைந்த மோசமான ஆட்சியை நாடு இதுவரை பார்த்தது இல்லை. காங்கிரஸ் அரசை ஆட்சியில் இருந்து அகற்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் ஒன்றுசேர வேண்டும். பி.ஜே.பி.யும் அ.தி.மு.க. வும் ஒழுங்கிணைய வேண்டும்" என்று பொடிவைத்துப் பேச கூட்டம் ஆர்ப்பரித்தது.

அடுத்து மோடி மைக்பிடித்தார். "மத்திய காங்கிரஸ் அரசு, காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளிடம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது. அந்தவகையில் தமிழகமும் குஜராத்தும் தொடர்ந்து மத்திய அரசால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசுகளின் உரிமைகளை மத்திய அரசு பறிக்கிறது. இது இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது" என்று ஜெயலலிதாவின் கருத்துக்களையே மோடியும் பிரதிபலித்தார்.

அத்வானியும் மோடியும் போயர்ஸ் கார்டனில் ஜெயலலிதாவைச் சந்திக்க நேரம் ஒதுக்கப்பட்டு இருந்தாலும் சந்திப்பு நடைபெறவில்லை. ஆனால், அவர்கள் கலந்துகொண்ட விழாவுக்கு அரசு முழு ஒத்துழைப்பு கொடுத்தது. காமராஜர் அரங்கம், மியூசிக் அக்கடமி என்று தனியார் அரங்கங்களில் இதுவரை நடந்து வந்தவிழா இந்தமுறை வள்ளுவர் கோட்டத்தில் நடத்தப்பட்டது. அத்வானி, மோடி வருகைக்காக சாலைகள் சீர் செய்யப்பட்டன. பொலிஸ் பாதுகாப்பும் ஏகத்துக்கும் இருந்தது. பார்வையாளர்கள் கொண்டுவந்த பொருட்களை எல்லாம் வாங்கிவைத்து டோக்கன் கொடுக்கும் வேலையை பொலிஸே பெருமையுடன் செய்தது. வாகனங்களை நிறுத்துவதற்காக மாநகராட்சிப் பள்ளியையும் கொடுத்து உதவினார்கள். ஆக, நாடாளுமன்றத் தேர்தலுக்கு அ.தி.மு.க.வுக்கு ஒரு கூட்டணிக்கட்சி ஆயத்தம்!

எம்.பரக்கத் அலி

# இலவச கல்வியை இல்லாதொழிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடுகிறது

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் இலவசக் கல்வி முறைமையை இல்லாதொழிக்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்கள் மட்டுமன்றி இலவசக்கல்வி முறைமையையும் அரசாங்கம் உதாசீனம் செய்து வருகின்றது.

தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதனை அரசாங்கம் பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. எனவே, பல்கலைக்கழகங்களில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுத்திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

பௌதீக வளப்பற்றாக்குறை, மாணவர்களுக்கான வசதிகள், விரிவுரையாளர்களின் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட சகல காரணிகளையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

துறைமுகங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள், வீதிகள், பெருந்தெருக்களை அமைக்க முடியுமாயின் பல்லைக்கழகங்களை அபிவிருத்தி செய்ய முடியாது என ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

# அமெரிக்கச் சிறையில் உள்ள மருத்துவர் பணிக்குச்செல்ல விருப்பம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உதவி வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டு அமெரிக்காவில் சிறை வைக்கப்பட்டுள்ள இலங்கை வைத்தியர் தன்னை மீண்டும் பணிக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரியுள்ளார். இலங்கை வைத்தியரான முருகேசு விநாயகமூர்த்தி கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்காவில் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

இந்த சிலையில் வடக்கு லண்டனில் உள்ள வைத்தியசாலைக்கு பணிக்குச் செல்ல தனக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என அவர் வேண்டியுள்ளார்.

தனது மனைவியான புஸ்பத்துடன் இணைந்து வைத்தியர் முருகேசு விநாயகமூர்த்தி அறுவை சிகிச்சை செய்து வந்துள்ள நிலையில் கைது செய்யப்பட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யப்பட்ட தீவிரவாத இயக்கம் என்ற பட்டியலில் இருந்து நீக்க அதிகாரி ஒருவருக்கு இலஞ்சம் வழங்கியதாக குறித்த வைத்தியர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் புலிகளுக்கு ஆயுதம் விநியோகிக்கும் ஒருவரின் வங்கிக் கணக்குகளை வைத்தியரே இயக்கி வந்துள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தான் இலஞ்சம் வழங்கியதை ஒப்புக் கொண்ட வைத்தியர் தன்னை விடுதலைப் புலி உறுப்பினர் அல்ல என கூறிவந்துள்ளார். (எ-5)

# தீர்வுத் திட்டம் குறித்து அரசாங்கமே கருத்துக்களை வெளியிட வேண்டும்

## இந்தியா கூறக்கூடாது என்றது ஜே.வி.பி

(கொழும்பு)

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் குறித்து இந்தியா அறிவிக்கக்கூடாது என ஜே.வி.பி. ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளது.

இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை மக்களுக்கு அறிவிப்பது எந்த வகையிலும் பொருத்தமானதாக அமையாது என ஜே.வி.பி. அரசியல் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டமென்றை முன்வைக்க முடியும் என ஜனாதிபதி தம்மிடம் உறுதியளித்ததாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

நாட்டின் முக்கிய பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை வேறு ஒரு நாட்டு வெளிவிவகார அமைச்சரின் வாயிலாக அறிந்து கொள்வது துரதிர்ஷ்டவசமானது என ஜே.வி.பி . தெரிவித்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் அரசாங்கமோ அல்லது ஜனாதிபதியோ இதுவரையில் கருத்துக்களை வெளியிடவில்லை. அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் என்ன என்பதனை மக்களுக்கு அரசாங்கமே தெரியப்படுத்த வேண்டியது அவசியமானது என ஜே.வி.பி.தெரிவித்துள்ளது. (அ-2)

# கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளையும் யாழ். சிவில் பிரிவு படைத்தலைமையகமும் இணைந்து க.பொ.த. உயர்தர பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 12 மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-7)

# 2012.01 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1265-இங்கிலாந்து நாடாளுமன்றம் தனது முதலாவது கூட்டத்தை வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையில் நடத்தியது.

★ 1523-இரண்டாம் கிறிஸ்டியான் டென்மார்க் நோர்வேயின் மன்னர் பதவியில் இருந்து விலக்கப்பட்டார்.

★ 1649-இங்கிலாந்தின் முதலாம் சார்ள்ஸ் மன்னனுக்கெதிராக தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்களுக்காக விசாரணைகள் ஆரம்பமாகின.

★ 1783-பெரிய பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் ஆகிய புரட்சிப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு அமைதி உடன்பாட்டில் கைச்சாத்திட்டன.

★ 1788-இங்கிலாந்தில் இருந்து கைதிகளை ஏற்றிக் கொண்டு வந்த முதல் தொகுதி கப்பல்களில் மூன்றாவது கப்பல் நியூ சவுத் வேல்சின் பொட்டனி விரிகுடாவை அடைந்தன.

★ 1795-பிரெஞ்சுப் படைகள் ஆம்ஸ்டர்டாமைக் கைப்பற்றின.

★ 1839-யூங்கே என்ற இடத்தில் பெரு மற்றும் பொலிவியா கூட்டுப் படைகளுடன் இடம்பெற்ற சமரில் சிலி வெற்றி பெற்றது.

★ 1841-ஹொங்கொங் தீவு பிரித்தானியாவினால் கைப்பற்றப்பட்டது.

★ 1887-பேர்ள் துறைமுகத்தை கடற்படைத்தளமாகப் பாவிப்பதற்கு அமெரிக்க செனட் அனுமதியளித்தது.

★ 1892-முதலாவது அதிகாரபூர்வமான கூடைப்பந்தாட்ட விளையாட்டு மசாசுசெட்சில் இடம்பெற்றது.

★ 1906-வாரன்ஸ் சர்க்கஸ் (Warrens Circus) யாழ்ப்பாணம் வந்திறங்கியது. இதுவே யாழ்ப்பாணம் கண்ட முதலாவது சர்க்கஸ் ஆகும்.

★ 1913-உடுவில் இராமநாதன் பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1936-எட்டாம் எட்வேர்ட் ஐக்கிய இராச்சிய மன்னனாக முடிசூடினார்.

★ 1929-வெளிப்புறக் காட்சிகளைக் கொண்ட முதலாவது முழு நீளத் திரைப்படம் In Old Arizona திரையிடப்பட்டது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் ரோயல் வான் படையினர் பேர்லின் மீது 2300 தொன் குண்டுகளை வீசினர்.

★ 1945-ஹங்கேரி இரண்டாம் உலகப் போரில் தனது பங்கை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

★ 1947-கொலை முயற்சி ஒன்றிலிருந்து மகாத்மாகாந்தி உயிர் தப்பினார்.

★ 1969-முதலாவது துடிமீன் கிராப் விண்மீன் தொகுதியில் கண்டு பிடிக்கப்பட்டது.

★ 1981-ரொனால்ட் ரேகன் ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவராகி 20 நிமிடங்களில் ஈரான் தான் 444 நாட்களாகப் பிடித்து வைத்திருந்த 52 அமெரிக்க பணயக் கைதிகளையும் விடுவித்தது.

★ 1990-அசர்பைஜானிய விடுதலைக்கு ஆதரவான போராட்டம் சோவியத் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது.

★ 1991-சூடான் அரசு நாடெங்கும் இஸ்லாமியச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதில் நாட்டின் வடக்குப் பகுதி முஸ்லிம்களுக்கும் தெற்கில் வாழும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் உள்நாட்டுப் போர் மேலும் தீவிரமடைந்தது.

★ 1992-பிரான்சில் பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 85 பேர் உயிரிழந்தனர்.

★ 2001-பிலிப்பைன்சில் இடம்பெற்ற புரட்சியில் தலைவர் ஜோசப் எஸ்ட்ராடா பதவியகற்றப்பட்டு குளோரியா மக்கபாகல் அறாயோ தலைவரானார்.

### பிறப்புக்கள்

★ 1873-ஜொஹன்னஸ் வில்ஹெம் ஜென்சென், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ.1950)

★ 1920-பெடெரிக்கோ ஃபெலினி, இத்தாலியத் திரைப்பட இயக்குநர் (இ.1993)

★ 1930-எட்வின் ஆல்ட்ரின், அமெரிக்க விண்வெளி வீரர்

★ 1931-டேவிட் லீ, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர்

★ 1956-பில் மேகர், அமெரிக்க மேடைச் சிரிப்புரையாளர்


### இறப்புக்கள்

★ 1838-ஒசியோலா, அமெரிக்க தொல்குடி போர்த் தலைவன் (பி.1804)


★ 1936-ஐந்தாம் ஜார்ஜ், இங்கிலாந்தின் மன்னன் (பி.1865)


### சிறப்பு நாள்

★ அமெரிக்க ஜனாதிபதிகள் பதவியேற்ற தினம் (1937 இலிருந்து)



★ 1987- பெரியசாமி தூரன், கர்நாடக இசை வல்லுநர் (பி.1908)







இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அரியாலைப்பகுதியில் அமைக்கப்பட்ட வீடுகள் நேற்று முன்தினம் அதன் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து நாடாவெட்டி திறந்து வைப்பதையும் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகச் செய்தியாளர், என்.குமார்)

# 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த அரசின் பங்காளி கட்சிகள் இடம் தருமா?

## ஜயலத் எம்.பி. கேள்வி



இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண தற்சமயம் ஜனாதிபதி வழங்கவுள்ள உறுதிமொழி ஒட்டு மொத்த இலங்கைத் தமிழ் மக்களையும் இந்தியாவையும் ஏமாற்றும் செயற்பாடா? என்று கேள்வி எழுப்பியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி பொதுச் செயலாளருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன அரச தரப்பினர் இதற்கு ஒத்துழைப்பாளர்களா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில்அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யுத்தம் நிறைவடைந்த கட்டத்தில் இவ்வாறான உறுதி மொழியை இந்தியாவுக்கு ஜனாதிபதி வழங்கியிருந்த போதிலும் நடைமுறைப்படுத்தவில்லை. இந்த நிலையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின்னர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்லத் தயார் என்று ஜனாதிபதி தெரிவித்ததாக கூறியிருந்தார்.

இதேபோன்றே யுத்தம் நிறைவடைந்த 2009.05.19 ஆம் திகதிய காலப்பகுதியில் அதாவது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்ல இணக்கம் என்று இந்தியாவுக்கு இலங்கை அறிவித்திருந்ததாக அறிய முடிந்தது.

இந்த நிலையில் மீண்டும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி அதற்கு அப்பாற்சென்று அரசியல் தீர்வுக்கான இணக்கத்தை ஜனாதிபதி வெளியிட்டுள்ள போதிலும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளாக ஜாதிகஹெலஉறுமய மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவார்களா என்பதில் சந்தேகம் எழும்பியுள்ளது.

எனவே, அரசின் இந்த அறிவித்தலானது இலங்கை தமிழரை மட்டுமன்றி இந்தியாவை ஏமாற்றும் செயற்பாடாகவும் மாறலாம். 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது. எனவே, 13 ஆவது திருத்தத்தின் ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை வழங்க அரசுக்கு இதுவே சிறந்த தருணம். (அ-2)

# விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தமிழ் மொழி மூல விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளராகவும் அப் பிரதேச மக்களின் நன்மதிப்பை பெறக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

இப் பதவிக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். 30 வயதிற்கு குறையாதவராகவும் 60 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் விவாகம் செய்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்ற விபரங்களை மாவட்ட செயலாளர் காரியாலயம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், அபிவிருத்தி சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றில் பார்வையிட முடியும்.

இவற்றுக்கான விண்ணப்ப படிவங்களை மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மாவட்ட பதிவாளர் அலுவலகங்களிலும் பெற்று எதிர்வரும் மாசி மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம் முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (அ-7)

# பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அடக்குமுறை கண்டிக்கப்பட வேண்டும்

## பொன்சேகா தெரிவிப்பு

பல்கலைக்கழக மாணவ மாணவியர் மீது பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகள் கண்டிக்கப்பட வேண்டியவை என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் எதிர்காலமான பல்கலைக்கழக மாணவர் மீதான தாக்குதல்கள் அருவருக்கத்தக்கது. இவர்கள் மீது இராணுவத்தினரோ அல்லது பொலிஸாரோ தாக்குதல் நடத்தக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் யுத்த நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிராக சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளில் கலந்து கொள்ளும் நோக்கில் சென்றிருந்த போது அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (அ-2)

# எங்களுக்கு காது கேட்கவில்லை உங்களுக்கு மூளை சரியில்லை

## சபையில் ரவி கருணாநாயக்க எம்.பி.கிண்டல்

(கொழும்பு)

எங்களுக்கு காது கேட்கவில்லை. ஆனால், உங்களுக்கு மூளை சரியில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சியின் எம்.பியான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இதனால் சபையில் நேற்று முன்தினம் சிரிப்பொலி எழுந்தது.

பாராளுமன்றம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் கூடியது. சபையின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரம் ஆரம்பமானது.

ஒழுங்குப்பத்திரத்தின் பிரகாரம் முதலாவது கேள்வியை இலஞ்சம் மற்றும் ஊழல் ஆகியவற்றினை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட நிதி முறைப்பாடுகளின் எண்ணிக்கை, விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை உள்ளிட்ட கேள்விகளைக் கேட்டிருந்தார்.

கேள்விகளுக்கு ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன பதிலளித்தார். இதன்போது குறுக்கிட்ட ரவி கருணாநாயக்க அமைச்சர் அளிக்கின்ற பதில் எனக்கு விளங்கவில்லை. ஏதோ இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக் காட்டினார்.

இதன்போது குறுக்கிட்ட ஆளும்கட்சி எம்.பியான ஏ.எச்.எம்.அஸ்வர் காது கேட்கவில்லையா? என வினவினார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த ரவி எம்.பி.எங்களுக்குக் காது கேட்கவில்லை. ஆனால், உங்களுக்கு மூளை சரியில்லை என்றார். இதனால் சபையில் சிரிப்பொலி எழுந்தது.

ரவி கருணாநாயக்கவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சபாநாயகர் இயந்திரக் கோளாறு ஏதாவது ஏற்பட்டிருக்கின்றதா? என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு பணித்தார். (அ-2)

# ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

எதிர்க்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். மிகவும் முக்கியமான பேச்சுவார்த்தைகளை நடத்தும் நோக்கில் அவர் டில்லிக்கு நேற்று முன்தினம் புறப்பட்டு சென்றதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் காங்கிரஸ் கட்சி, அரசியல் பிரமுகர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நிலையில் ரணில் இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ரணில் இந்திய அரசியல் வாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# விரிவுரைகள் ஆரம்பம்

இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் நடத்தப்படும் மூலதனச் சந்தை முதலீட்டுக் கல்வி தொடர்பான பரீட்சைக்கான வழிகாட்டல் விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் வாரம்தோறும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்.கிளையில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே பதிவு செய்த மாணவர்கள் தமது பதிவிலக்கத்தினை கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்.கிளையுடன் தொடர்பு கொண்டுபெற்றுக் கொள்வதுடன் புதிய மாணவர்களின் பதிவுகளும் ஏற்றுக்கொள்ளப்படும் என இணைப்பாளர் கு.திலீபன் அறிவித்துள்ளார். (அ)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# எதிர்கால உலக சக்திப்பயன்பாட்டில் சூரிய கலங்களின் முக்கியத்துவமும் அவற்றின் நவீன வளர்ச்சியும்

இன்றைய உலகின் சக்தித் தேவையின் பெரும்பகுதி பாரம்பரிய உயிர்ச்சுவட்டு எண்ணெயின் (Traditional fossil fuel) பயன்பாட்டினாலேயே நிவர்த்தி செய்யப்படுகின்றது. இவ்வளமானது மிக மோசமான வீதத்தில் குறைவடைந்து வருகின்றமை அத்துறைசார் வல்லுநர்களால் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்பட்டுவரும் உண்மையாகும். அடுத்த 20 வருட காலத்தில் உலக சக்திப் பாவனை தற்போதைய பாவனையின் 50% வீதத்திற்கும் அதிகமாக அதிகரித்திருக்கும்.


அதேவேளை உயிர்ச்சுவட்டு எண்ணெய் வள இருப்பு இன்னும் சில வருடங்களில் முற்றாகத் தீர்ந்துவிடும் சாத்தியக் கூறுகள் உணரப்படுகின்றன. இவ்வுயிர்ச்சுவட்டு எண்ணெயின் அதீத பயன்பாடு காரணமாக சுற்றாடலில் ஏற்படக்கூடிய பாரிய விளைவுகளும்கூட நன்கு உணரப்பட்டுள்ளன. எனவே எமது எதிர்கால உலகின் கவனத்தை புதுப்பிக்கக் கூடிய மாற்றுச்சக்தி முதல்களை நோக்கித்திரும்பவேண்டிய கட்டாயம் இன்றைய விஞ்ஞானிகளின் கட்டாய கடப்பாடாக உள்ளது. அதாவது நாளைய தலைமுறையினர் இருண்ட உலகைப் பெறாதிருப்பது இன்றைய தலைமுறையினரின் கைகளிலேயே உள்ளது.

உயிர்ச்சுவட்டு எண்ணெயின் உற்பத்தி பல நூற்றாண்டு கால இயற்கைச் செயற்பாடாகும். இதனை ஒருமனித ஆயுளிலோ அல்லது சில தலைமுறைகளின் காலத்திலோ புதிதாக உற்பத்தி செய்யமுடியாது. அதனாலேயே இவை புதுப்பிக்கப்படாத சக்திமுதல்களென (Non- Renewable energy source) அழைக்கப்படுகின்றன.


எதிர்கால தேவைகளை புதுப்பிக்கக்கூடிய சக்தி முதல்களிலிருந்து (Non- Renewable energy source) பெறுவதே இன்றைய விஞ்ஞானிகளின் கடுமையான உழைப்பின் பின்புலமாகும். நீரியல்சக்தி, காற்றுச்சக்தி, சூரியவெப்பச்சக்தி, கடலலைச்சக்தி, சூரியக்கலச் சக்தி என்பன புதுப்பிக்கக் கூடிய மாற்றுச்சக்தி முதல்களுட் சிலவாகும். நீரியல் மின் சக்தியைப் பெற்றுக்கொள்வதற்கு நீர்வீழ்ச்சிகளும் காற்று, கடலலை என்பவற்றின் மூலமும் மின்சக்தியைப் பெற்றுக் கொள்வதற்கு நாட்டின் அமைவிடமும் கட்டுப்படுத்தும் காரணிகளாக அமைகின்றன. கருச்சக்தி ஒரு சிறந்த மாற்றுச் சக்தி முதலாக இருப்பினும் சுற்றாடல் பாதுகாப்பு கேள்விக் குறியாகவே அமைகின்றது.

எதிர்கால உலகின் சக்தித்தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கான மூலோபாயமாக சூரியகலங்கள் (Solar Cells) அமைகின்றன. சூரியக்கலங்களைப் பயன்படுத்தி மின்சாரத்தினை உற்பத்தி செய்தல் ஏனைய முறைகள் மூலமான மின்சார உற்பத்தியிலும் சிறந்ததாக அமைகின்றமைக்குக் காரணங்களாக சூரியசக்தியை நேரடியாக மின்சக்தியாக மாற்றமுடிகின்றமை சூழலிற்கு பாதிப்பை ஏற்படுத்தும், மாசுப் பொருட்களை வெளிவிடாமை, எதுவித அசையும் இயந்திரப் பகுதிகளையும் கொண்டிராமை மற்றும் பாரிய அளவிலான பராமரிப்பு தேவைப்படாமை போன்றவற்றையும் குறிப்பிடலாம். மேலும் குறிப்பாக எமது நாடு போன்ற மத்திய கோட்டிற்கு அண்மையாக உள்ள நாடுகள் ஆண்டுமுழுவதும் முழு அளவிலான சூரியக்கதிர்வீச்சைப் பெறுவதால் சூரியக்கலங்களின் உச்சப் பயன்பாட்டினைப் பெறக்கூடியதாக இருக்கும்.

தற்போதைய பயன்பாட்டிலுள்ள சூரியக்கலங்களில் சிலிக்கன் எனப்படும் குறைகடத்திப் பதார்த்தம் பயன்படுத்தப்படுகின்றது. விரும்பிப் பயன்படுத்துவதற்கான பிரதான நோக்கம் அவற்றின் பளிங்குருக் கட்டமைப்பேயாகும். இக்குறைகடத்திகளினை மாசாக்குவதனால் உருவாக்கப்படும் (p-n) சந்தியானது சூரியக்கலமாகத் தொழிற்படுகின்றது. இச்சந்தி மீது சூரியஒளி படும்போது அவ் ஒளியின் ஒரு பாகமானது இப்பதார்த்தங்களால் உறிஞ்சப்படுகின்றது. அதாவது ஒளியினுடைய சக்தியானது பதார்த்தத்திற்கு இடமாற்றப்படுகின்றது. இவ்வாறு பெறப்பட்ட சக்தியானது குறைகடத்தியில் கட்டுண்ட நிலையிலிருக்கும் இலத்திரன்களை விடுவிக்கப் பயன்படுத்துகின்றது. இவ்வாறு விடுவிக்கப்படும் இலத்திரன்களே மின்னோட்டமாகப் பெறப்படுகின்றது.



வளைந்த இயல்புடைய சேதன சூரியகலம்





சூரிய கலம் பொறிக்கப்பட்ட கைப்பை, தலைக்கவசம் மற்றும் ஆடை

மின்சக்தி உற்பத்திச் சந்தையில் சூரியக் கலங்கள் பின் தங்கியிருப்பதற்குக் காரணம் அவற்றின்அதியுயர்உற்பத்திச் செலவினமாகும். சாதாரண மக்களால் சூரியக்கலங்களைக் கொள்வனவு செய்ய முடியாமலிருப்பதே அவற்றின் பயன்பாடு குறைவாக அமைவதன் காரணமாகக் குறிப்பிடலாம். வழமையான பாவனையிலுள்ள சூரியக்கலங்களின் பிரதான பாகமான சிலிக்கனை வெண்மணலிலிருந்து பிரித்தெடுத்தல், தூய்மையாக்கல் மற்றும் தேவையான வடிவில் மாற்றியமைத்தல் போன்ற பலவகையான படிமுறைகளிற்கான செலவினங்கள் மிக உயர்வானதாகும்.

தற்போதைய சூரியக்கலங்கள் சார்ந்த ஆராய்ச்சிகளின் முக்கிய நோக்கங்கள் அவற்றின் திறனை (Efficiancy) அதிகரித்தல், பாரம்குறைந்த, நீண்டகாலம் நிலைக்கக்கூடிய (Good Stability), வளைதகு இயல்புடைய (Flexible), மலிவான சூரியக்கலங்களை உற்பத்தி செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதனடிப்படையில் சூரியக்கலங்களின் புதிய தலைமுறையான சேதன சூரியக்கலங்கள் (Organic Solar Cells) சார்ந்த ஆராய்ச்சிகள் மீதே விஞ்ஞானிகளின் பார்வை பாரியளவில் திரும்பியுள்ளது.

சேதனச் சூரியக் கலங்களின் பிரதான செயற்பாட்டு பகுதிகளாக நனோ- படிக்கட்டமைப்புக்களும் (Nanocrystalline), பல்பகுதியங்களும் (Polymer) அமைகின்றன. இப்பல்பகுதிய கட்டமைப்புக்கள் பல சேர்ந்து ஒன்றிணைந்த பல்பகுதியக்கூற்றை (Conjugated polymer) ஆக்குகின்றன. இவற்றின்மீது சூரிய ஒளிபடும்போது அப்பதார்த்தத்தினுள்ளே உருவாக்கப்படும் இலத்திரன் - துளை சோடிகள் (Excition) புறச்சுற்றில் மின்னோட்டமாகப்பெறப்படுகின்றன.

இவ்வாறான சேதன பல்பகுதிய சூரியக்கலங்கள் இலகுவாக உற்பத்திசெய்யக்கூடியனவாகவும் குறைந்த உற்பத்திச் செலவினத்தினை உடையதாகவும் வளைதகு இயல்புகளை உடையதாகவும் காணப்படுகின்றன. இவற்றின் வளைதகு இயல்புகள் கலங்களை பல்வேறு இடங்களில் வழிவகுக்கின்றன. இவ்வாறான பலதரப்பட்ட சாதகமான இயல்புகளை இவை கொண்டிருப்பினும் அவற்றின் மின் உற்பத்தித்திறன் நீடித்து நிலைக்கும் தன்மை போன்றவை தற்போதைய பயன்பாட்டிலுள்ள சிலிக்கன் சூரியக் கலங்களுடன் ஒப்பிடும் போது மிகக்குறைவாகவே காணப்படுகின்றன.

தற்போதைய பயன்பாட்டிலுள்ள சூரியக்கலங்கள் 15% மின் உற்பத்தித்திறனை கொண்டிருக்கின்ற போதிலும் திரவ மின்பகுபொருளை (Liquid electrolyte) கொண்ட சேதன சூரியக்கலங்களின் திறன் 11% ஆகவும் திண்ம மின்பகுபொருட்களை (Solid electrolyte) கொண்ட சூரியக்கலங்களின் திறன் 5 தொடக்கம் 6% ஆகவுமே அமைகின்றன. அவற்றிலும் திரவ மின்பகுபொருள் பயன்படுத்தப்படும் சூரியக்கலங்கள் மிகக்குறைந்த உறுதிப்பாட்டை உடையனவாகக் காணப்படுகின்றன.சேதன சூரிய கல ஆராய்ச்சிகளில்கலங்களின் திறனை அதிகரித்தலும் அவற்றின் உறுதிப்பாட்டை அதிகரித்தலுமே பெரும் சவால்களாக அமைகின்றன. இவற்றிற்கான ஆராய்ச்சிகள் உலகளவில் பாரிய அளவில் பாரிய அரச முதலீடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வாராய்ச்சிகளிற்கு நனோ தொழில்நுட்பத்தின் பங்களிப்பும் இன்றியமையாததொன்றாகின்றது. இக்கலங்களின் உயிர்ப்பு படைகளின் மேற்பரப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல், புதிய பதார்த்தங்களை அறிமுகப்படுத்தல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக கலங்களின் திறனை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் கலங்களின் நிலைத்திருக்கும் தன்மையினை அதிகரிப்பதற்காக திரவ மின்பகு பொருட்களை திண்ம மின்பகுதி பொருட்களால் பிரதியீடு செய்வதற்கான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேதன சூரியகல ஆய்வு விஞ்ஞானிகளின் முக்கிய குறிக்கோள் உயர் உறுதிப்பாடுடைய 10% வரையான திறனை உடைய சூரிய கலங்களை அமைத்துவிட வேண்டும் என்பதேயாகும். இவ்வாறான கலங்கள் அமைக்கப்படும் பட்சத்தில் தாழ் மின்நுகர்வுக் கருவிகளில் உதாரணமாக மணிக்கூடு, தொலைபேசி, கணிப்பான் போன்றவற்றில் அவற்றின் பிரயோகங்கள் இடம்பெறும்.

**கைலாசபதி பாலசங்கர்**
உதவி விரிவுரையாளர்,
பௌதீகவியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

சேதன சூரிய கலங்கள் தற்போதைய பயன்பாட்டிலுள்ள சூரிய கலங்களின் விலையுடன் ஒப்பிடும் போது 6 மடங்கு குறைவாக அமைகின்றன. அவற்றின் திறனானது 10% ஆக அமையும் பட்சத்தில் சிலிக்கன் சூரிய கலங்களிற்கு சர்வசமனான சேதன சூரிய கலங்கள் 4 மடங்கு குறைவான விலையில் சந்தையில் பெற்றுக்கொள்ள முடியும்.

நனோ தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி சேதன சூரிய கலம் சார்ந்த ஆராய்ச்சிகள் இலங்கையிலும் விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ். பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் துறையிலும் பல மில்லியன் முதலீட்டில் நனோ தொழில்நுட்ப உபகரணங்களின் உதவியுடன் உலகின் முன்னணி ஆய்வு மையங்களுடன் இணைந்து சர்வதேச தரத்திலான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை பலரும் அறிந்திராத ஒன்றாக உள்ளது. இங்கு நடைபெறும் ஆராய்ச்சி இலங்கையிலேயே சேதன சூரிய கலங்களில் காபன் நனோ குழாய்களின் பிரயோகம் சார்ந்த ஆராய்ச்சியாக அமைவதும் ஒரு முக்கியமான விடயமாகும். (தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 58

**சூரிய மின்கலத்தின் தந்தை யார்?**

**விடைகளை 30.01.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

சி. கேதீஸ்வரன்
(ஆசிரியர்-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A)
நூலகம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 57 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
Archchana Sivarajah
15/38, Maariamman Lane,
Thirunelvely,

**புதிர் 57 இற்கான கேள்வியும் விடையும்:**
**கேள்வி:-** படத்தில் காட்டிய மின்சுற்றுக்களில் உள்ள மின்குமிழ்கள் ஒரே மாதிரியானவை. எம்மின்சுற்றில் உள்ள மின்குமிழ்கள் பிரகாசமாக ஒளிரும்.
**விடை:-** Circuit 1

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 58**

சரியான விடை:-.............................................
முழுப்பெயர்:-.............................................
முகவரி:-.............................................
தொ.பே. இல:.............................................
கையொப்பம்:.............................................

# இந்தியர்களை அவமதிக்கும் நோக்கில் காட்சிகள் ஒளிபரப்பப்படவில்லை

## பி. பி. சி. மறுப்பு

பிரித்தானிய அரசுக்கு சொந்தமான பிபிசி தொலைக் காட்சியில் டாப் கியர் என்ற நிகழ்ச்சியின் மூலமாக இந்தியாவை அவமதிக்கும் நோக்கத்துடன் நாங்கள் செயற்படவில்லை என்று பிபிசி மறுத்துள்ளது.

இந்த டாப் கியர் நிகழ்ச்சி சமீபத்தில் இந்தியாவில் நடைபெற்றது. அப்போது ஒரு காரில் கழிவறை படம் வரைந்து செல்லும் வழியெல்லாம் மக்களிடம் அதை காட்டியபடி ஜெர்மி சென்றார்.

அப்போது அவர் இந்தியா முழுக்க கழிவறை இல்லாதது போல துர்நாற்றம் இருக்கின்றது. இங்கு வருபவர்கள் வெளியில் ஓடவேண்டியுள்ளது என்றார். ரயில்களில் பேனர் கட்டி அதில் உங்களுக்கு இங்கிலாந்து தான் ஏற்றது. ஆங்கில உணவுகளை உண்ணுங்கள் என்றும் எழுதியுள்ளார்.

இந்நிகழ்ச்சி பிபிசியில் ஒளிபரப்பானதும் லண்டனில் உள்ள இந்திய தூதரகத்துக்கு ஏராளமான புகார்கள் வந்தன. பிபிசி அலுவலகத்துக்கும் கண்டன கடிதங்கள் குவிந்தன.

இதையடுத்து இந்தியாவை அவமதித்த செயலுக்கு பிபிசி மன்னிப்பு கேட்க வேண்டும் என்று லண்டனில் உள்ள இந்திய தூதரகம் மூலம் வலியுறுத்தப்பட்டது.

இதற்கு நேற்றுமுன் தினம் மறுப்புத் தெரிவித்த பிபிசி இந்தியர்களை அவமதிக்கும் நோக்கத்தில் அந்த நிகழ்ச்சி இல்லை.

இந்தியாவின் சிறப்புக்கள், அழகிய இடங்கள், கலாசாரம் பற்றியும் நிகழ்ச்சியில் பல காட்சிகள் உள்ளன. எனவே வருத்தம் தெரிவிக்க தேவையில்லை என்று கூறியுள்ளது. (அ-2)

# மியன்மார் இடைத்தேர்தலில் போட்டியிட ஆங்சாங் சூகி வேட்புமனுத்தாக்கல்

(யாங்கூன்)

மியன்மாரில் வரவிருக்கும் இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக அந்நாட்டின் ஜனநாயகத் தலைவர் ஆங்சாங்சூகி நேற்று முன்தினம் வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.



மியன்மார் அரசு அரசியல் கைதிகளை விடுவித்தல், அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல், பழங்குடியினர் உடனான மோதலை நிறுத்தி வைத்தல் என சமீப காலமாக பல்வேறு ஜனநாயக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இதன்மூலம் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கலாம் என அரசு கருதுகின்றது.

இந்நிலையில் பாராளுமன்றின் 48 இடங்களுக்கான இடைத்தேர்தல் எதிர்வரும் ஏப்ரலில் இடம்பெறவுள்ளது.

அதில் போட்டியிடுவதற்கு ஆங்சாங் சூகிக்கு அந்நாட்டு அரசு அனுமதித்துள்ளது. முதற்கட்டமாக அவரின் தேசிய ஜனநாயக லீக் கட்சி தேர்தல் கமிஷனில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக தற்போது யாங்கூன் அருகில் உள்ள காவ்மு என்ற தொகுதியில் போட்டியிடுவற்காகநேற்று முன்தினம் அவர் தன் வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

இதுகுறித்து அவர் அதிகாரபூர்வமாக செய்தி வெளியிடவில்லை என்றாலும் கட்சியின் மூத்த பிரமுகர் வின் டெயின் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில்,

கட்சியின் முதல் நபராக சூகி தன் வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றார்.

மொத்தமுள்ள 48 இடங்களில் 40 இடங்களில் சூகியின் கட்சி தன் வேட்பாளர்களை நிறுத்த திட்டமிட்டுள்ளது. (அ-2)

# சிரியாவின் ஜனாதிபதி பதவிவிலக வேண்டும்

## ஒபாமா வலியுறுத்தல்

சிரியாவில் தொடரும் வன்முறைகளால் அதிருப்தியடைந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்தை எதிர்த்து கடந்தாண்டு மார்ச் தொடக்கம் மக்கள் போராடி வருகின்றனர். அரபு லீக் குழு வந்த பின்பும் கூட மக்கள் மீதான சிரிய இராணுவத் தாக்குதல்கள் குறைந்தபாடில்லை.

இந்நிலையில் லெபனான் எல்லை அருகில் உள்ள ஜபாதானி என்ற இடத்தில் எதிர் தரப்பு வீரர்களுக்கும் சிரிய இராணுவத்திற்கும் இடையில் போர்நிறுத்தம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து இரு தரப்பினரும் அந்நகரின் தெருக்களில் இருந்து விலக சம்மதித்துள்ளனர். இதற்கிடையில் சிரியாவின் அரபு லீக் குழுவின் பணிகளை சீனா வரவேற்றுள்ளது. சீன வெளியுறவு செய்தித் தொடர்பாளர் லியு வெய்மின் நேற்று முன் தினம் அளித்த பேட்டியில், அரபு லீக் குழு வந்த பின்பும் கூட வன்முறை குறையவில்லை என்றாலும் பல நகரங்களில் பாதுகாப்பு அதிகரித்துள்ளது. அதன் பணி வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்துள்ளார்.

அரபு லீக்கின் படைகள் சிரியாவில் குவிக்கப்பட்டு மக்கள் காக்கப்படவேண்டும் என்ற கட்டாரின் கோரிக்கையை அண்மையில் சிரியா நிராகரித்துள்ளது. இந்நிலையில் சிரியா மீதான புதிய பொருளாதாரத் தடைகள் விதிப்பையோ படைக்குவிப்பையோ அனுமதிக்க முடியாது என ரஷ்யா உறுதியாகத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஜோர்தான் மன்னர் அப்துல்லா நேற்று முன்தினம் அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்துப் பேசினார். அப்போது ஒபாமா அளித்த பேட்டியில் துரதிர்ஷ்டவசமாக அந்நாட்டில் நிகழும் வன்முறைகளை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஈரான், ஈராக் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை நாங்கள் பேசினாலும் சிரிய விவகாரத்தைத் தான் முக்கியமாக விவாதித்தோம். சிரியா வன்முறையை கைவிடுவதற் கான சர்வதேச நெருக்கடி மற்றும் சூழலை உருவாக்குவது குறித்து ஆலோசித்தோம் என்றார். (அ-2)

# அமெ. தூதரின் வருகைக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு

(இஸ்லாமாபாத்)

நேட்டோ படைகள் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி நடத்திய விமான தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் 24 பேர் பலியானார்கள். அதிலிருந்து அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மோதல் நிலவி வருகின்றது.


இந்த நிலையில் அமெரிக்காவின் சிறப்பு தூதுவர் மார்க் கிராஸமேன் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், கட்டார் ஆகிய நாடுகளில் இந்த வாரம் சுற்றுப் பயணம் செய்வார் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்து இருந்தார். ஆனால் அமெரிக்க சிறப்புத்தூதர் வருகைக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்து உள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் உங்களின் வருகை உகந்ததாக இருக்காது என்று மார்க்கிடம் தெரிவித்து உள்ளோம் என்று பாகிஸ்தான் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் என்ன காரணத்துக்காக அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது என்று அவர் கூற மறுத்து விட்டார். (அ-2)

# ஆப்கானிஸ்தானில் பனி; 24 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் நாட்டில் கடும் பனிப்பொழிவு நிகழ்கிறது. அங்குள்ள படாக்சன் மலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கடுமையான பனிப்பொழிவில் 500 இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்தன.

இந்த இடிபாடுகளுக்குள் உயிரோடு புதைந்து 24 பேர் பலியானார்கள். மேலும் 100க்கும் மேற்பட்டவர்களை காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் பலரும் இந்த பனிப்பொழிவில் சிக்கி பலியாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. அவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகின்றது. (அ-2)



சீனா வந்திருந்த அமெரிக்காவின் புளோரிடா மாகாண முன்னாள் ஆளுநர் ஜெஃப்புஷ் (இடது) அந்நாட்டு துணை ஜனாதிபதி ஜி–ஜிங்பிங்கை பீஜிங்கில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# 30 செயற்கைக்கோள்களை தயாரிப்பதற்கு சீனா திட்டம்

இந்தாண்டில் 30 செயற்கை கோள்களைத் தயாரிக்க சீனா திட்டமிட்டுள்ளதாக சீன வான்வெளி ஆராய்ச்சித்துறை தெரிவித்துள்ளது.

இவற்றில் ரொக்கெட்டுக்களின் எண்ணிக்கை 21 அடங்கும். எதிர்வரும் காலங்களில் சீனாவின் வான்வெளி ஆராய்ச்சிக்காக செயற்கைக்கோள் ஏவுவது அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அதிகளவில் செயற்கைக் கோளைவிண்ணில்செலுத்தப்பட்ட நாடுகளின்வரிசையில் முதலில் ரஷ்யாவும், இரண்டாம் இடத்தில் சீனாவும் இடம் பெற்றுள்ளது.

மேலும் எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் வளி மண்டலத்தில் சுமார் 60 தொன் எடை கொண்ட விண்வெளி மையத்தை நிறுவ உள்ளதாகவும் அவை தெரிவித்துள்ளன. (அ-2)

# ஊழல் இல்லாத நாடாக இந்தியாவை மாற்ற புறப்பட்டுள்ள இளைஞர் குழு

அன்னா ஹாசாரே, பாபா ராம்தேவ் போன்ற சமூக ஆர்வலர்கள் வரிசையில் இளைஞர் குழு ஒன்று இந்தியாவை ஊழல் இல்லாத நாடாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஊழல் இல்லாத இந்தியாவை உருவாக்கும் நோக்கமாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இளைஞர்கள் ஒரு சிறிய குழுவாக கன்னியாகுமாரியில் இருந்து தலைநகர் புதுடில்லி வரை நடைபயணம் மேற்கொண்டுள்ளனர்.

இக்குழுவின் தலைவர் அப்துல் முஜீப்கான் கூறியதாவது, இந்தியாவை ஊழல் இல்லாத நாடாக மாற்றுவதே எங்களது நோக்கம். எங்களது நோக்கம் தனிப்பட்ட அளவில் நேர்மையாக இருந்தால் ஊழல் இல்லாத நாடாக இந்தியா மாறி விடும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த விழிப்புணர்வு போராட்டம் கன்னியாகுமாரி விவேகானந்தர் பாதையில் ஆரம்பித்து புதுடில்லியில் உள்ள ராஜ்காட்டில் முடிவடைகின்றது.

தற்போது இந்தகுழு விஜயவாடாவை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தானே புயலின் தாக்கத்தை அறிவதற்கு பிரான்ஸ் அமைச்சர் புதுச்சேரி வந்தார்

தானே புயலால் சேதம் அடைந்துள்ள பகுதிகளை பார்வையிடுவதற்காக பிரான்ஸ்நாட்டின்அமைச்சர் ஈடோவ்ரத் கோர்டியல் இரண்டு நாட்கள் பயணமாக இந்திய மாநிலம் புதுச்சேரிக்கு சென்றுள்ளார்

புதுச்சேரி மாநில முதல்வர் ரங்கசாமியின் வேண்டுகோளுக்கு இணங்க தானே புயலால் புதுச்சேரியில் ஏற்பட்டுள்ள சேத மதிப்புகளை நேரில் பார்வையிட்டு நிதியுதவி வழங்குவதற்காக பிரான்ஸ் அமைச்சர் வருகை தந்துள்ளதாக அரசு தரப்பு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்பு பிரான்ஸ் நாட்டு தூதுவர் பிரான்கோயிஸ் ரிச்சர் மற்றும் பிரான்ஸ் அதிகாரிகள ஆகியோர் தமிழகம் மற்றும் புதுச்சேரி எல்லைப்பகுதியில் அமைந்துள்ள கோட்டக் குப்பம் பகுதியில் ஆய்வுப் பணியை மேற்கொண்டனர்.

புதுச்சேரி மாநில ஆளுநர் இக்பால் சிங், முதல்வர் ரங்கசாமி ஆகியோரை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரான்ஸ் அதிகாரிகள் புதுச்சேரி மாநில அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து பாராட்டு தெரிவித்தனர். (அ-2)

வெற்றி வேண்டுமா? கவலை, நோய் முதலிய வற்றை பொறுத்துக் கொண்டு நீடித்து உழை யுங்கள். *– ராபர்ட் ப்ரெளிங்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இந்திய அரசு தொழிற்பயிற்சிகளை தமிழ் இளைஞர்களுக்கு வழங்க வேண்டும்

மீனைக் கொடுக்காதே.மீன் பிடிக்கக் கற்றுக் கொடு என்பது சீனப் பழமொழி.மீனைக் கொடுத்தால் அதைத் தொடர்ந்து கொடுக்க வேண்டும்.

அப்படியானால், மீனைப் பெற்றுக் கொள்பவன் யாரோ ஒருவரை நம்பியிருக்க வேண்டிய – மற்றவரில் தங்கி வாழ வேண்டிய நிலையேற்படும்.

இதன் காரணமாக மீனைப் பிடிப்பதற்குக் கற்றுக் கொடுத்தால், அவன் தன் சொந்தக் காலில் நிற்கும் தைரியத்தைப் பெற்றுக் கொள்வான்.

இத்தத்துவத்தை எடுத்தியம்பும் சீனப் பழமொழியை எங்கள் மண்ணிலும் அமுல்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இது விடயத்தில் இலங்கை அரசு வழங்கக் கூடிய தொழிற்பயிற்சிகள் என்பன போதுமானதாக, தரம் வாய்ந்ததாக இல்லை என்பது பொதுவான கருத்து.

அதேநேரம் எங்கள் இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் தொழிற்பயிற்சியோ அன்றி வேலைவாய்ப்போ இல்லாமல் வெறுமை நிலையில் உள்ளனர்.

எனவே தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு இந்திய அரசு தொழிற் பயிற்சிகளை –தொழில் நுட்பப் பயிற்சிகளை வழங்க வேண்டும்.

இப்பயிற்சிகளை தமிழ்நாட்டிலோ அன்றி இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலோ வழங்க முடியும் என்பதற்கப்பால், இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இத்தகைய பயிற்சிகளை ஏற்படுத்துவது பொருத்துடையதாகும்.

உலக அரங்கில் இந்திய தேசம் மோட்டார் சைக்கிள், கார் மற்றும் பஸ் உள்ளிட்ட தயாரிப்பில் மிக உயர்ந்த நிலையில் உள்ளது.

அதேநேரம் இலங்கையிலும் இந்திய உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் கிளைகளை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்.

எனவே இந்திய உற்பத்தி நிறுவனங்களை இங்கு அமைக்கும்போது தமிழ் இளைஞர்களுக்கு அங்கு பயிற்சி வழங்கும் ஏற்பாட்டை இந்தியா செய்து தரவேண்டும்.

ஈழத் தமிழ் மக்களுக்கு இந்தியா சில குறிப்பிட்ட உதவிகளை செய்ய முன்வந்தமைக்கு நாம் நன்றி கூறலாம்.

அதேநேரம் ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவிடம் எதிர்பார்த்த உதவி இதுவல்ல.அது வேறாக இருந்தது.

பரவாயில்லை.எதிர்பார்த்தது கிடைக்கவில்லை என்பதற்காக எதனையும் வேண்டாம் என்று சொல்லும் தகைமைப் பாட்டிலும் தமிழ் மக்கள் தற்போது இல்லை.

இப்போது யாழ்ப்பாணத்தில் கலாசார மண்டபம் ஒன்றை அமைத்துக் கொடுக்க இந்திய அரசு முன்வந்துள்ளது.

யுத்தத்தால் எங்கள் கலாசாரத்தை தொலைத்து விட்டு ஏங்கி இடிவிழுந்த நிலையில் இருக்கும் எங்களுக்கு இனிமேல்தான் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டு எங்கள் கலாசர்ரம் காப்பாற்றப்படப் போகின்றது.

உண்மையில் கலாசார மண்டபம் கட்டி அதில் கலாசார நிகழ்வை நடத்தும்போது அதன் சுற்றுப்புறத்தில் கலாசாரக் கலைப்பு நடக்கும் என்பது திண்ணம்.

கறந்தபால் முலைபுகா எனும் தத்துவத்தில் இவற்றை எல்லாம் விட்டுவிட்டு இந்திய தேசம் ஈழத் தமிழ் மக்களுக்கு உதவி புரிய நினைத்தால் அதனை இரண்டு வழியில் செய்ய வேண்டும்.

அதில் ஒன்று உரிமையைப் பெற்றுக் கொடுத்தல்.

மற்றையது இந்திய தொழில்நுட்பப் பயிற்சிகளை எங்கள் இளைஞர்களுக்கு வழங்குதல். இவை இரண்டையும் செய்தால் கலாசார மண்டபமே தேவையில்லை.

எங்களை நாங்களே தற்காத்துக் கொள்வோம். இது சத்தியம்.

## மதுபான போத்தல்கள் பொலிஸார் வசம்

(கொழும்பு)

சிகிரியா திகம்பதன பகுதியில் பாரியளவில் முன்னெடுக்கப்பட்டு வந்த சட்ட விரோத மதுபான உற்பத்தி நிலையமொன்று சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தை சுற்றிவளைத்து ஆயிரம் மதுபான போத்தல்களை கைப்பற்றியதுடன் நான்கு சந்தேகநபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் கெக்கிராவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

சட்டவிரோத மதுமானம் தயாரிப்பதற்கு பயன்படுத்திய சில உபகரணங்களும் இதன் போது கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் தம்புள்ளை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)

# பேராசிரியர் தட்டிலுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுப்பு

## விரிவுரையாளர்கள் சம்மேளனம் தெரிவிப்பு

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஆர்.ஓ.தட்டிலின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது சங்கத்தின் இணைச் செயலாளர் கலாநிதி ஆனந்த ஜயவிக்ரம இதனை தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் தட்டிலின் உயிருக்கோ அவரது பெயருக்கோ பாதிப்பு ஏற்பட்டால் அதனை தமது சம்மேளனம் வன்மையாக கண்டிக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தேவை ஏற்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்க தமது சம்மேளனம் தயங்காது எனவும் ஜயவிக்ரம கூறியுள்ளார்.

பேராசிரியர் தட்டிலே உயர்தரப் பரீட்சைக்கான இசட் புள்ளிகளை அறிமுகப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பெற்றோர்களை தினமும் கால் தொட்டு வணங்க வேண்டுமா?

தாய் ,தந்தையரையும் குருவையும் தினசரிக் கடமையாக கால் தொட்டு வணங்க வேண்டும் என்பது முன்னோர்கள் வகுத்திருந்த விதி. தாய், தந்தையருக்கும் குருவுக்கும் ஓர் மலர்ந்த புன்னகைகூட வழங்காத இத்தலைமுறைக்கு இந்த விதி ஒரு பழைய ஏற்பாடு. குருபக்தி அழிந்து வரும் இந்த தலைமுறைகளை வார்த்தெடுக்க இயலும் என்று நம்பிக்கை தரும் சில ஆசாரியர்களின் மூதுரைகளும் உள்ளன.மதிப்பைத் தெரிவிக்கும் நான்கு ஆசாரங்கள் நாம் கண்டு வருந்துகின்றோம். அதில் முதலாவதானது **வணக்கம்** என்று கூறுவது, இரண்டாவது பெரியோர்களைக் கண்டால் எழுந்து நிற்பது, மூன்றாவது கால்தொட்டு வணக்கம், இறுதியானது சாஷ்டாங்க வணக்கம்.

தினமும் காலை பெரியவர்களின் கால் தொட்டு வணங்குவதால் அவர்களுடைய ஆசீர்வாதம் பெறலாம் என்று நம் விசுவாசப் பிரமாணங்கள் கூறுகின்றன. அவர்கள் நமக்கு செய்த சேவைகளை நினைத்து தான் நாம் கால் தொட்டு வணங்குகின்றோம்.பதிலாக அவர்கள் ஆசியையும் பெறுகின்றோம்.

யோகாப்பியாசத்தை சிறந்த ஓர் உடற்பயிற்சியாக கண்டறிந்து வரும் இந்த நவீன காலத்தில் கால் தொட்டு வணங்குதல், சாஷ்டாங்க வந்தனம் என்பவை மிக முக்கியமான யோகா முறைகள். ஆதலால் இதை சிறந்த ஓர் உடற்பயிற்சியாகவும் காணலாம்.

பெற்றோர்களை வணங்குதல் குடும்பத்தில் ஒற்றுமையுண்டாக்கும். பாசமும் நெருங்கிய உறவும் உறுதிப்படுகின்றன.இத்துடன் வீட்டில் நிலவும் நிம்மதியின்மையும் போய்விடும் என்ற விசுவாசமுண்டு.பாதங்களுக்கு தனிச் சிறப்பான தன்மைகள் உள்ளதாக புராணங்களும் முனிவர்களும் கருதியிருந்தனர். இறைவனின் திருப்பாதங்களையே முனிவர்கள் வணங்கியிருந்தனர். இந்து தர்மங்களில் சேவைகள் செய்யும் அரிஜன மக்கள் இறைவன் பாதங்களினின்று உதித்ததாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

**பரணாமோ துக்க சமனம் தம் நமாமி ஹரிமிவரம்** என்று பாகவத்திலும் காணலாம்.

# வெள்ளி நற்சிந்தனை

## 55 செவ்வியல் தமிழில் சீர்மியம்

பெண்மை அருள் நிலை கொண்டது.பெற்ற தாயின் பேரன்பும் தரத்தின் உள்ளன்பும் உலகில் இதனை உணரவைத்துள்ளது.இறைவன் இறைவியோடு வந்து மெய்யடியார்க்கு அருள் செய்வார் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது.மணிவாசகர் இறைவனைக் குருவடிவமாகவே முதலிற் கண்டவர். எனவே அருளும் தோற்றமாக மீண்டும் இறைவனைக் காண விருப்புக் கொண்டபோது உமையாள் பங்கா என அழைத்து வழிபாடு செய்கிறார். இறைவியின்அருட்பார்வையை உலகியலிலே வைத்து விளக்குகிறார். **மானோர் நோக்கி உமையாள்** எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். மானைப் போல மடமான நோக்கையுடையவள் உமையம்மை.

முன்னர் அடியார்க்கு அருளிய போதுதிருவருட்சக்தியோடுவந்தமையை மணிவாசகர் மீட்டுப்பார்க்கிறார். இறைவனுடையஇனிமையானஅருள்நிலையை விளக்கும் போதுதான் அறிந்த இனியவற்றோடு ஒப்பிட்டுக் கூறுகிறார். தேனே! கரும்பே! அமுதே என இனியவற்றை எடுத்துக்காட்டுகின்றார். தேனும் கரும்பும் நாம் அறிந்த இனிய சுவைகள். ஆனால் அமுது நாம் அறியாதது. ஆனால் பலராலும் இனிய பொருளாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.தேன்,கரும்பின் சாறு இரண்டும் அபிடேகத்திரவியங்களாகும். அமிழ்தம் என்பது சாவாமருந்தென்பர். அதனை உண்டவர் நீடூழி வாழ்வார்.இம் மூன்றும் மனித வாழ்வில் மகிழ்வைத் தருவன. இறையருளும் இத்தகையதே.எமது வாழ்வில் இன்பந்தரவல்லது இறையருளே.

இத்தகைய இறையருளை இடைவிடாத தொடர்ச்சியான வழிபாட்டால் பெறலாம். சிவபெருமானை தென்தில்லையிலே எழுந்தருளியுள்ள கூத்தபிரானை வழிபட்டால் இது கைகூடும்.இதனால் தில்லைச் சிற்றம்பலம் புகழ்பெற்ற தலமாக இன்று வரை நிலவுகிறது.அடியார் அங்கு சென்று இறைவன் திருவுள்ளக்கருத்துப் பொருந்தப் பெற்று அவன் திருவடியை விரைவாகப் போய்ச் சேருகின்றார்.ஆனால் மணிவாசகர் தொடர்ச்சியான இறை வழிபாட்டை மேற்கொள்ளாமையால் இவ்வுலக வாழ்க்கையிலே வருந்துகிறார். இதனை அவரே விளக்கமாகக் கூறியுள்ளார்.தசை நிறைந்த புழுக்கூடாகிய தன்னுடலை ஓம்பியிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

மணிவாசகருடைய மனம் உலக வாழ்க்கையில் வெறுப்புக்கொள்கிறது. இறைவன் குழுவாய் வந்து குருந்த மர நிழலிலே செய்த அறிவுரையை மறந்து வாழ்ந்தவர். மீண்டும் இறையருள் பெற்று உடலை ஒழித்து முத்தி பெற முயற்சி செய்கிறார்.இறையடியார்களில் உடலைப் பெரிதும் வெறுத்துப் பாடியிருப்பவர் மாணிக்கவாசகரே. தென் தில்லையிலே வீற்றிருக்கும் கோனாகிய சிவனிடம் சென்று உடலை அழிக்க அருள் வேண்டுகிறார். தொல்லையிரும் பிறவித்தளையை நீக்க விரும்புகிறார்.ஏனைய அடியார் வாழ்வியலோடு தன்னுடைய வாழ்வியலையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். மெய்யடியாராகத் தான் வாழவில்லை என்ற உண்மை நிலையைத் தெளிவாக அறிந்து கொள்கிறார்.தேனே, அமுதே, கரும்பே, சிவனே, கோவே எனப்பலவாறு இறைவனை அழைத்து இரந்து நிற்கின்றார். இறைவன் திருக்குறிப்புக்காகக் காத்து நிற்கிறார்.வழிபாடு செய்யும் போது எல்லோரும் இதனையே எதிர்பார்த்து நிற்பர்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

*மானோர் நோக்கியுமையாள் பங்கா*
*வந்திங்காட் கொண்ட*
*தேனே அமுதே கரும்பின் தெளி*
*வே சிவனே தென் தில்லைக்*
*கோனே யுன்றன் திருக்குறிப்புக்*
*கூடவார் நின் கழல்கூட*
*ஊனார் புழுக்கூடிது காத் திங்*
*கிருப்ப தானேன் உடையாளே*

# விண்டோஸ் 7 வேகமாக இயங்க...

விண்டோஸ் 7 ஒப்பரேட்டிங் சிஸ்டம் மிக வேகமாக பயனாளிகளின் விருப்பத்தேர்வாக மாறி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த சிஸ்டத்தில் சில டிப்ஸ்களை மேற்கொண்டு அதன் இயக்கத்தை விரைவுபடுத்தலாம். நாம் கணனி செயற்பாடுகளை வேகமாக மேற்கொள்ளலாம். அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.


**★ விரைவாக அப்ளிகேஷன் இயக்க**

கீ போர்டில் விரல்களை இயக்கியவாறே அப்ளிகேஷன் புரோகிராம்களை இயக்க வேண்டுமா? முன்பு இவற்றை இயக்க மவுஸ் கொண்டு முகப்பு திரையில் ஐகன் இருந்தால் அதன் மீது கிளிக் செய்திட வேண்டியிருக்கும். அல்லது விண்டோஸ் லோகோ கீ அழுத்தி கிடைக்கும் பட்டியலில் ஓல் புரோகிராம்ஸ் (All Programs) தேர்ந்தெடுத்து அதில் அப்ளிகேஷன் புரோகிராமின் இடம் தேடி கிளிக் செய்திட வேண்டியதிருக்கும்.

விண்டோஸ் 7 சிஸ்டத்தில் இப்படி எல்லாம் அலைய வேண்டியதில்லை. விண்டோஸ் கீ அழுத்தி கிடைக்கும் கட்டத்தில் அப்ளிகேஷன் பெயரைச் சுருக்கமாக டைப் செய்து (எ.கா. Google Chrome இயக்க Chr iTunes இயக்க it) என்டர் தட்டினால் போதும். அல்லது டாஸ்க் பாரில் இந்த அப்ளிகேஷன்களை வைத்திருந்தால் விண்டோஸ் கீயுடன் டாஸ்க் பாரில் அந்த அப்ளிகேஷன் இடம் பெற்றுள்ள இடத்தின் எண்ணை இணைத்து அழுத்தினால் போதும். எடுத்துக்காட்டாக குரோம் பிரவுசர் இரண்டாவது இடத்தில் இருந்தால் விண்டோஸ் +2 அழுத்தினால் குரோம் பிரவுசர் இயங்கத் தொடங்கும்.

**★ ஆட்டோ பிளே கட்டுப்படுத்துதல்**

ஒரு சிடி அல்லது டிவிடி திரைப்பட சிடியைப் போட்டவுடன் அது இயங்கத் தொடங்குகிறது. அது ஏன்? என்றாவது நீங்கள் யோசித்தது உண்டா? விண்டோஸ் ஓட்டோ பிளே (Windows Auto Play) என்ற செயற்பாடு இதனை இயக்குகிறது. இந்த இயக்கம் எந்த சிடிக்கும் பொருந்தும். அது பைல்கள் அல்லது புரோகிராம்கள் இருப்பதாக இருந்தாலும் இதேபோலச் செயற்படும். இதனை நம் விருப்பப்படியும் மாற்றி அமைக்கலாம். இதற்கு முதலில் Control Panel> Auto Play எனச் செல்லவும். இங்கு சிடி, டிவிடி, கமரா,




ஸ்மார்ட் போன் என எந்த சாதனத்தை இணைத்தாலும் அதனை எப்படி இயக்க வேண்டும். இணைத்தவுடனா அல்லது நாம் விரும்பும் போதா என செட் செய்திடலாம்.

**★ தானாக இடம் மாறும் விண்டோ**

மாறா நிலையில் விண்டோஸ் 7 சிஸ்டம் திறக்கப்பட்டிருக்கும் விண்டோ ஒன்றை நீங்கள் ஓர் ஓரத்திற்கு இழுத்துச் சென்றால் விண்டோவினைச் சுருக்கி ஓரத்தில் அமைக்கும். மேலாக இழுத்தால் திரை முழுமையும் கிடைக்கும். வேறு வகையில் திரையில் பாதியாக அமைக்கும். பல விண்டோக்களை ஒரே நேரத்தில் திரையில் பார்த்தவாறே இயக்க எண்ணுபவர்களுக்கு இந்த செயற்பாடு உதவக் கூடியதாகவே உள்ளது.

ஆனாலும் பலருக்கு இது எரிச்சலைத் தரும். இந்தச் செயற்பாட்டினை நிறுத்த எண்ணுவார்கள். இதனை நிறுத்த Control Panel Ease Of Access Center சென்று Make the mouse easier to use என்பதில் கிளிக் செய்திடவும். இதன் பின்னர் Prevent windows from being automatically arranged when moved to the edge of the screen என்பதன் எதிரே உள்ள டிக் அடையாளத்தை எடுத்துவிடவும். அடுத்து ஓகே கிளிக் செய்திடவும்.

**★ தவறினைச் சரி செய்திட வேறு ஒரு பயனாளராக**

விண்டோஸ் இயக்கம் அல்லது தினந்தோறும் நீங்கள் பயன்படுத்தும் ஒரு அப்ளிகேஷன் இயக்குவதில் பிரச்சினைகளை எதிர் கொள்கிறீர்களா? விண்டோஸ் 7 இயக்கத்தில் இதனைப் புதிய ஒரு வழியில் சரி செய்திடலாம். வழக்கமான உங்கள் யூசர் எக்கவுண்ட் விடுத்து தனியாக ஒரு யூசர் எக்கவுண்ட் திறந்து அந்த பயனாளராக இந்த அப்ளி கேஷன்களை இயக்கிப் பார்க்கவும். இந்த வழியில் மீண்டும் பிரச்சினைகள் வருகின்றனவா எனக் கண்காணிக்கவும். இந்த எக்க வுண்ட்டில் பிரச்சினைகள் இல்லை என்றால் பிரச்சினைகள் சிஸ்டத்தைப் பாதிக்கும். வகையில் இல்லை என்று பொருளாகிறது. அப்ளிகேஷனை இன்ஸ்டோல் செய்ததில் அல்லது செட்டிங்ஸ் அமைப்பதில் ஏதேனும் சிறிய அளவில் தவறு நேர்ந்திருக்கலாம். இரண்டு எக்கவுண்ட்களிலும் பிரச்சினைகள் ஏற்பட்டால் அப்ளிகேஷன் அல்லது ஒப்ப ரேட்டிங் சிஸ்டம் மீண்டும் ரீ இன்ஸ்டோல் செய்திட வேண்டியதிருக்கும்.

**★ விண்டோஸ் எக்ஸ்புளோரரில் பைலின் துணைப் பெயர்**

பைல்களின் துணைப் பெயர் நீங்கள் எத்தகைய பைலைத் தேடுகிறீர்கள். அல்லது தேர்ந்தெடுக்கிறீர்கள் என்பதைக் காட்டும். .doc என்பது வேர்ட் பைலின் துணைப் பெயர். ஒரு டிஜிட்டல் போட்டோ .jpg என்ற துணைப் பெயரினைக் கொண்டுள்ளது. இப்போது வரும் விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டம் பைல்களின் துணைப் பெயரை மறைத்துக் காட்டுகின்றது.

ஆனால், இந்த பெயர் காட்டப்பட வேண்டும் என நீங்கள் விரும்பினால் விண்டோஸ் எக்ஸ்புளோரரை இயக்குங்கள். பின்னர் Organize Fold er and search options எனச் செல்லுங்கள். இங்கு View டேப் தேர்ந்தெடுக்கவும். இதில் Hide extensions for known file types என்பதற்கு முன்னால் உள்ள டிக் அடையாளத்தை எடுத்துவிடவும்.

**★ லப்டொப் ட்ராக்பேட் இயக்க நிறுத்தம்**

லப்டொப் கணனியைப் பயன்படுத்துபவர்கள் தொடக்கத்தில் கீ போர்ட்டில் டைப் செய்கையில் மிகவும் சிரமப்படுவார்கள். அவர்கள் விரல்கள் ட்ரேக் பேடைத் தொட்டுவிட்டால் உடன் கேர்சர் எங்காவது சென்று நிற்கும். டைப் செய்வது எல்லாம் வேண்டாத இடத்தில் டைப் ஆகும். ட்ரேக் பேட்டில் விரல் அல்லது உள்ளங்கை பாகம் படாமல் டைப் செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கும்.

இந்த சிரமத்தை Touchpadpal 1.2 என்ற புரோகிராம் நீக்குகிறது. இதனை http:// tpp.desofto.com/ என்ற முகவரியில் உள்ள இணைய தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து லப்டொப்பில் பதிந்து கொண்டால் பிரச்சினை தீரும். இது தானாகவே இயங்கி நீங்கள் கீ போர்ட்டில் டைப் செய்கையில் ட்ரேக் பேடின் செயலாக்கத்தினை நிறுத்திவிடும்.

# மீண்டும் ராம்நிட் வைரஸ்!

பேஸ்புக் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஓர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முன்பு உலகின் பல கணனிகளில் பரவி வெகு வேகமாக நாசத்தை விளைவித்த ராம்நிட் Ramnit என்னும் வைரஸ் தற்போது பேஸ்புக் வாடிக்கையாளர்களின் கணனிகளில் பரவி அதிலுள்ள தகவல்களை திருடுவதுடன் கணனிகளில் முடக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. Seculeri என்ற வைரஸ் ஆய்வு அமைப்பு இதனைக் கண்டறிந்து இந்த எச்சரிக்கையை வழங்கி உள்ளது.

இதுவரை 45 ஆயிரம் பேஸ்புக் எக்கவுண்ட்களை பாதித்து தகவல்களை திருடி அனுப்பி உள்ளது. அந்த எக்கவுண்ட்களில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. முதன் முதலில் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ராம்நிட் வைரஸ் தொடங்கியது. அண்ட்டி வைரஸ் தொகுப்புக்களை தயாரித்து வழங்கும் மெக் அபி நிறுவனம்இது குறித்து கூறுகையில்,

இந்த மால்வெயர் EXE,DLL மற்றும் HTML ஆகிய பைல்களை தாக்கி முடக்குவதாக 2010 ஒக்டோபரில் அறிவித்தது. மிகத் தெளிவாக இந்த வைரஸ் செயற்படும் விதத்தினையும் விலாவாரியாக விளக்கியது. இப்போது இந்த வைரஸின் இன்னொரு பரிமாணம் வெளியாகி பரவுகிறது என Quarri Technologies என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.

முதல் முறை வந்த போது ராம்நிட் வைரஸ் பிளாஷ் ட்ரைகள் மூலம் வந்ததாக கணடறியப்பட்டது. தற்போது பேஸ்புக்மூலம் பரவுகிறது.

கணனிகளில் சமுதாய இணையத்தளங்களைப் பயன்படுத்துபவர்கள் கணனிகளை, சமுதாய இணையத்தளங்களை பயன்படுத்துபவர்கள் கணனிகளின் பிற இயக்கங்களிலும் சமுதாய இணைய தளங்களிலும் ஒரே பாஸ்வேர்ட்டை பயன்படுத்துவதனைப் பழக்கமாக கொண்டுள்ளனர்.. எனவேதான் இந்த வைரஸின் புதிய வகை பேஸ்புக் சமுதாயதள வாடிக்கையாளர்களின் எக்கவுண்டில் விளையாடுகிறது. இரண்டு வகைகளில் இந்த வைரஸின் தாக்குதலிலிருந்து தப்பிக்கலாம். முதலாவதாக பேஸ்புக் எக்கவுண்டை வைத்திருப்பவர்கள் அந்த தளத்தில் சந்தேகப்படும் வகையில் லிங்க் இருந்தால் அவற்றின் மீது கிளிக் செய்திட வேண்டாம். எந்த தளம் நண்பர்கள் அல்லது அமைப்புகளிடமிருந்து லிங்க் வந்தாலும் அதில் கிளிக் செய்திடும் முன் சரியானது தானா எனச் சோதனை செய்த பின்னரே கிளிக் செய்திட வேண்டும். இரண்டாவதாக பேஸ்புக் எக்கவுண்டை பாஸ்வேர்ட்டையே ஏனைய எக்கவுண்ட்கள் குறிப்பாக வங்கி சேவைகளில் பயன்படுத்துவதனை அறவே தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு சேவைக்கும் ஒரு பாஸ்வேர்ட் பயன்படுத்த வேண்டும். நிதி சார்ந்த வேலைகளுக்கு மட்டுமன்றி ஜிமெயில் மற்றும் பிற ஈமெயில் சேவைகளிலும் தனித்தனி பாஸ்வேர்ட் அமைத்துக் கொள்வது புதிய ராம்நிட் வைரஸிலிருந்து நம்மைக் காக்கும்.

தற்போதைக்கு இந்த ராம்நிட் வைரஸ் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாட்டில் பரவலாக பரவிக் கொண்டு வருகிறது. விரைவில் பேஸ்புக் தளம் மூலம் ஏனைய நாடுகளில் உள்ள கணனிகளைப் பாதிக்கும் வாய்ப்புக்கள் பெருகி வருகின்றன. இந்தக் கட்டுரை எழுதும் நேரத்தில் சர்வதேச அளவில் 90 ஆயிரம் கணனிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்தி கிடைத்துள்ளது.




# ஒரே தளத்தில் உலகப் பத்திரிகைகள்

உலகின் 82 நாடுகளில் வெளியாகும் 877 பத்திரிகைகளை ஒரே இணையத்தளத்தில் பெறலாம். இந்த வாய்ப்பினை http://www.newseum.org/todaysfrontpages/flash/ என்ற முகவரியில் உள்ள இணையத்தளம் தருகிறது. தளத்தின் செயலுக்கு ஏற்ற வகையில் இதற்கு நியூசியம் (newseum) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த தளத்தில் நுழைந்தவுடன் அமெரிக்க கண்டத்தின் வரைபடம் காட்டப்பட்டு எந்த நகரங்களிலிருந்து வெளியாகும் தினசரி நாளிதழ்கள் காட்டப்படுகின்றனவோ அவற்றை அடையாளம் காட்டும் வகையில் புள்ளிகள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. மற்ற நாடுகளுக்கு மேலாக அந்த கண்டங்களின் பெயர்களோடு டேப்கள் கிடைக்கின்றன.

எனவே, நாம் விரும்பும் நாட்டில், நகரத்தின் வரைபடத்தில் உள்ள இடத்தில் மவுஸ் கேர்சரைக் கொண்டு சென்றால் என்ன செய்தித்தாள் என முன்பக்கத் தோற்றம் காட்டப்படுகின்றது. அந்த செய்தித்தாளின் செய்திகளைப் படிக்க அதனைக் கிளிக் செய்து அதன் மின் பதிப்பைப் பெறலாம். தொடர்ந்து கிளிக் செய்தால் செய்தித்தாள் முழுவதும் படிக்கக் கிடைக்கும்.

ஆங்கிலம் மட்டுமன்றி பிற மொழிகளில் வெளியாகும் செய்தித்தாள்களும் கிடைக்கின்றன. ஒவ்வொரு நாளும் அந்த அந்த நாளுக்குரிய செய்தித்தாள் கிடைக்கிறது. செய்தித்தாள் நிறுவனம் தன் பக்கங்களை மாற்றுகையில் இங்கும் அப்டேட் செய்யப்படுகிறது. எனவே, சர்வதேச செய்திகளை ஒரே இணையத்தளம் மூலம் கிடைக்கும் வாய்ப்பு பெறுகிறோம்.

எந்தவிதத் தணிக்கையும் இன்றி காட்டப்படுவதால் சிலவேளைகளில் நாட்டுக்கு நாடு பிரச்சினைக்குரிய தடை செய்யப்பட்ட செய்திகளும் இங்கு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

# டெஸ்ட் நம்பர் - 1 இங்கிலாந்து பாகிஸ்தான் அணியிடம் படுதோல்வி





சஜீட் அஜ்மலின் சுழலில் சிக்கிய இங்கிலாந்து அணி, முதலாவது டெஸ்டில் 10 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் அணியிடம் தோல்வி கண்டது.

பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகள் மோதும் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 17ம் திகதி டுபாயில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 192 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக் களையும் இழந்தது. இதில் பிறியர் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும் சுவான் 34, மோர்கன் 24, அணித்தலைவர் ஸ்ரோரஸ் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சஜீட் அஜ்மல் 24.3 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 55 ஓட்டங்களை கொடுத்து 7 விக்கெட்டுக்களையும் சீமா, ஹபீஸ், றீமன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 338 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மொகட் ஹபீஸ் 88 ஓட்டங்களையும் அட்னன் அக்மல் 61, தௌபிக் உமர் 58, அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக் 52 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் சுவான்4, பிரோட் 3, அன்டர்சன்2 விக்கெட்டுக்களையும் திரோட் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 146 ஓட்டங்களால் பின்னிலையில் இருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 160 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் பாகிஸ்தான் அணிக்கு வெற்றி இலக்காக 15 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக திரோட் 49, சுவான் 39 ஓட்டங்களை சேர்த்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பில் பந்துவீச்சில் உமர் குல் 4 விக்கெட்டுக்களையும், சஜீட் அஜ்மல், றீமன் தலா 3 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர். பதிலுக்கு சுலப இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணி விக்கெட் இழப்பின்றி 15 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஹபீஸ் ஆட்டமிழக்காமல் 115 ஓட்டங்களை பெற்றார். இப்போட்டியில் 10 விக்கெட்டுக்களை கைப்பற்றி பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு வழியமைத்த சஜீட் அஜ்மல் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள இங்கிலாந்து அணி இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரில் 4:0 என்று கைப்பற்றிய நிலையில் பாகிஸ்தானிடம் தோல்வி கண்டுள்ளது.

# 5 வருட காதல் கைகூடுகிறது நடிகை இஷா ஷர்வானியை மணக்கிறார் சகீர்கான்

இந்திய கிரிக்கெட் அணியின் வேகபந்து வீச்சாளர் சகீர்கான் இந்தி நடிகை இஷா ஷர்வானியை மணக்கிறார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் (வயது33) கடந்த 2005ஆம் ஆண்டில் இந்தி நடிகை இஷா ஷர்வானி (வயது27)யை சந்தித்தார். அது முதல் நட்புடன் பழகிய இருவருக்கும் இடையே காதல் அரும்பியது. இருவரும் சில நிகழ்ச்சிகளில் ஒன்றாக கலந்து கொண்டனர்.

சகீர்கான்-ஷர்வானி இடையிலான காதல் சில நேரங்களில் பிணக்கை சந்தித்தாலும் தற்போது திருமண பந்தத்தை தொட இருக்கிறது. இரு வீட்டு பெரியோர்களும் சந்தித்து பேசி திருமணம் செய்து வைக்க முடிவு செய்துள்ளனர்.

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் முத்தரப்பு கிரிக்கெட் போட்டி தொடர் முடிந்ததும் மார்ச் மாதம் இறுதியில் திருமணம் நடைபெறும் என்று சகீர்கானின் நண்பர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய மராட்டிய மாநிலத்தை சேர்ந்த சகீர்கான் இதுவரை 82 டெஸ்ட் மற்றும் 191 ஒரு நாள் போட்டியில் விளையாடி இருக்கிறார். டெஸ்டில் 285 விக்கெட்டுகளையும் ஒரு நாள்போட்டியில் 273 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி உள்ளார். இந்தி படங்களில் நடித்து வரும் இஷா ஷர்வானி குஜராத்தில் பிறந்தவர் . நடனம் ஆடுவதில் சிறப்பு பெற்றவர்.

# பங்களாதேஷ் பிரிமியர் லீக் ஜெயசூர்யா, முரளி ஏலத்தில் அதிக விலை

பங்களாதேஷ் பிரிமியர் லீக் தொடரில் விளையாடுவதற்காக இலங்கை வீரர் சனத் ஜெயசூரிய ஒரு இலட்சத்து 10 ஆயிரம் அமெரிக்க டொலர் ஏலத்தில் குல்னா ரோயல் பெங்கால் அணியினால் வாங்கப்பட்டுள்ளார். அதேவேளை முத்தையா முரளிதரன் சிட்டகொங் கிங்ஸ் அணியினால் ஒரு லட்சம் டொலர்களுக்கு வாங்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் பிரிமியர் லீக் சுற்றுப் போட்டி பெப்ரவரி 9 முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை வீரர் லஷித் மலிங்கவும் நேற்று ஏலத்தில் வாங்கப்பட்டார். சமிந்த வாஸ் ஏலத்தில் இருந்த போதிலும் நேற்று அவர் எந்த அணியினாலும் வாங்கப் படவில்லை

# இலங்கை கிரிக்கெட்டுக்கு புதிய தேர்வுக் குழு

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் புதிய கிரிக்கெட் தேர்வுக்குழு நேற்று நியமிக்கப்பட்டது. அதன் தலைவராக அசந்த டி மெல் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் அமல் சில்வா, ஹேமந்த விக்ரமரட்ன, டொன் அருணசிறி ஆகியோரும் புதிய கிரிக்கெட் தேர்வுக்குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சியில் மைக்ரோ கார் நிறுவனத்தில் சலுகைகள்

முப்பது வருடங்களாக ஏற்பட்ட யுத்த சூழ்நிலை முடிவுற்று தற்பொழுது வடக்கு கிழக்கு மீண்டும் எழுச்சி பெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மைக்ரோ கார் (Micro Car) நிறுவனம் தங்களது சேவையை இப்பிரதேசங்களில் அறிமுகப்படுத்தியுள்ளமையை மைக்ரோ கார் நிறுவனம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றது.

இலங்கை கண்காட்சி ஏற்பாட்டு குழுவினரின் ஏற்பாட்டில் இன்று முதல் மூன்று தினங்கள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் 3ஆவது முறையாகவும் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தக கண் காட்சியில் மைக்ரோ கார் நிறுவனமும் பங்கு பெறுகின்றது.

இந்தக் கண்காட்சியில் மைக்ரோ காட்சி கூடத்திற்கு வருகை தரும் யாழ். மக்களுக்கு விசேட சலுகைகளை பெற்றுத் தருவதற்கு மைக்ரோ நிறுவனம் முன்னிற்கின்றது.

மைக்ரோ காட்சி கூடத்திற்கு வருகை தந்து எந்தவொரு மைக்ரோ வாகனத்தையும் வாங்குவதற்கோ, பதிவு செய்வதற்கோ வருபவர்கள் 25 ஆயிரம் செலுத்தி உங்கள் பெறுமதி மிக்க மைக்ரோ வாகனத்தை பதிவு செய்து கொள்ள முடியும்.

அன்றைய தினங்களில் விசேட விலைக் கழிவாக ரூபாய் 20 ஆயிரத்தை இந் நிறுவனம் சலுகையாக வழங்குகின்றது.

முதன்முறையாக மட்டக்களப்பு பிரதேசத்தில் நடைபெற்ற கண்காட்சி பற்றி மைக்ரோ நிறுவனத்தின் முகாமைத்துவம் தெரிவித்துள்ளதாவது,

நாம் வடக்கு பிரதேசத்திற்கு மைக்ரோ காரை கொண்டு செல்வது இது முதன் முறையாகும். கிழக்கில் நடைபெற்ற எமது வெற்றிகரமான பயணத்தை தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்த கண்காட்சியும் வெற்றி பெறும் என்று நாம் நினைக்கின்றோம்.

யாழ் மக்களின் வசதி கருதி இத் திகதிகளில் வங்கி வசதிகளும் லீசிங் வசதிகளும் மைக்ரோ விற்பனை கூடத்தில் பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். நகரில் விரைவில் புதிய காட்சியறையொன்றையும் உதிரிப்பாகங்கள் மற்றும் சேவை நிலையமொன்றையும் திறந்து வைப்பதற்கு மைக்ரோ கார் நிறுவனம் எண்ணியுள்ளது.

மட்டக்களப்பில் நடைபெற்ற கண்காட்சிக்கு விசேடமாக தயாரான மைக்ரோ கார் நிறுவனம் இந்த கண்காட்சியில் அழகான கண் காட்சி கூடமாக திகழ்ந்தது.

இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சி நடைபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே மைக்ரோ கார் நிறுவனத்தின் அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் சுற்றியுள்ள அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங் களுக்கு விஜயம் செய்து அவர்களுக்கு துண்டு பிரசுரங்களை விநியோகித்தும் அவர்களின் வாகன தேவைகளை அறிந்தும் பெரிய அளவிலான ஏற்பாடுகளுடன் இந்த கண்காட்சியில் பங்கு பற்றுகின்றது.

ஆரம்பக்கட்டணமாக ரூபாய் 25 ஆயிரமான முற்பண தொகையை செலுத்தி மைக்ரோ மூலம் பெறுமதிமிக்க வாகனமொன்றை பெற்றுக்கொள்ளும் விசேட சந்தர்ப்பம் யாழ். மக்களுக்கு கிடைத்துள்ளது.

இந்தக் கண்காட்சியின் போது Geely மைக்ரோ பன்டா, மாக்ரூ, கொரன்டோ, ஹவர் ஜீப், MPV J3 சிறிய வான் மற்றும் 18 ஆசனங்களைக் கொண்ட அதி சொகுசு வான் மற்றும் விவசாயம் சம்பந்தமாக மைக்ரோ Agri டக்டரையும் பதிவு செய்து கொள்ளமுடியும்.

எப்போதும் புதிய வகைகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் மைக்ரோ கார் நிறுவனத்தின் சாவகச்சேரி, பருத்தித்துறை, வவுனியாவில் இருந்து அநுராதபுரம் வரை உள்ள அனைத்து மக்களும் யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு வருகை தந்து மிகக் குறைந்த தொகையை செலுத்தி விசேட விலைக்கழிவுடன் தங்களின் பெறுமதிமிக்க வாகனத்தை பதிவு செய்து கொள்ளுமாறு மைக்ரோ கார் நிறுவனம் தமது வாடிக்கையாளர்களை அன்புடன் அழைக்கின்றது.

# வெருகல் காட்டில் வெடிபொருள் கிடங்கு

மட்டக்களப்பு வாகரைக் காட்டுப்பகுதியில் பாரிய வெடிபொருள் கிடங்கு ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். வெருகல் காட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலின் போது 122 பெட்டிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7.62 மி.மீ துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 81 ஆயிரத்து 500 ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலகுவில் கண்டு பிடிக்க முடியாதவாறு இவை நிலத்துக்கு கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. சிறப்புக் பொலிஸ் பிரிவு ஒன்று அதனை கண்டுபிடித்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்த பின்னர் பெருந்தொகையிலான வெடி பொருட்களை பொலிஸார் மீட்டிருப்பது இதுவே முதல் முறை என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-5)

# ஓய்வு பெற்ற நீதிபதிகள் மூவரை கைது செய்வது குறித்து விசாரணை

(கொழும்பு)

இலங்கையில் ஓய்வுபெற்ற மூன்று நீதிபதிகளை கைது செய்வது குறித்து விசாரணைகள் இடம் பெற்று வருவதாக குற்ற விசாரணைப் பிரிவினர் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

நீதியமைச்சினால் வழங்கப்பட்ட மூன்று வாகனங்களை மூன்று நீதிபதிகள் திருப்பி ஒப்படைக்கவில்லை எனத் தெரிவித்து நீதியமைச்சு தாக்கல் செய்துள்ள வழக்கின்படியே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக குற்ற விசாரணைப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையின் முன்னாள் மூன்று நீதிபதிகளுக்கு மாதாந்தம் 38 ஆயிரம் ரூபாய் வட்டி அடிப்படையில் நீதியமைச்சு மூன்று வாகனங்களை வழங்கியதாக குற்ற விசாரணைப் பிரிவினர் கையளித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும் இந்த மூன்று நீதிபதிகளும் ஓய்வு பெற்றபோது வாகனத்தை மீள ஒப்படைக்காததால் குறிப்பிட்ட வாகன நிறுவனத்திற்கு நீதியமைச்சு 25இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டி ஏற்பட்டதாக இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வாகனத்தை திருப்பி ஒப்படைக்காமை சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் எனவும் இது தொடர்பில் விசாரணை நடத்தி அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குற்றவிசாரணைப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

குற்ற விசாரணைப் பிரிவினரின் கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி, இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்ற விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார். (எ-5)

## எதிர்க்...

கட்சியிடமே இருப்பதாகவும் எந்த நிலையிலும் இடையூறின்றி மாநகர நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்ல தம்மால் முடியும் என்றும் தெரிவித்தார். (எ-5)

## புதிய ரயில்...

நிதியுதவியுடன் மேற்கொள்ளப் படுகிறது. இந்தியஅரசினால் நடத்தப்படும் இர்கோன் நிறுவனம் இந் நிர்மாணப் பணியை பொறுப்பேற்று ள்ளது.

களுத்துறை வரையிலான இத் திட்டத்தின் இரண்டாவது கட்ட நிர்மாண நடவடிக்கை ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இதே வேளை இந்திய உதவியுடன் மேற் கொள்ளப்படும் பளை - காங்கேசன் துறை ரயில் பாதை நிர்மாண நடவடிக்கை 2013 -ம் ஆண்டு நிறைவடையவுள்ளது.(எ-5)

## இனப்பிரச்சினையை தீர்...

செனட்சபை உருவாக்கப்படவுள்ளது.

அதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோரும் பொலிஸ் மற்றும்காணி அதிகாரங்கள் குறித்து அரசாங்கம் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது. அது குறித்து தொடர்ந்தும் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகிறது எனத் தெரிவித்தார்.

ஆனால் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் கடந்த இரு தினங்களாக இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தையில் அரசாங்கம் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-5)

## இந்தியா...

எதிர்க்கட்சியினர் உட்பட பலரைச் சந்தித்ததுடன், வீடுகையளிப்பு, சைக்கிள் கையளிப்பு உட்பட பல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு இருந்தார்.

அத்துடன் இலங்கையுடன் ஐந்து உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டமையும் குறிப்பிடத் தக்கது. (எ-5)

## அப்துல்...

வரும் இவர், நாளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் மும்மொழி செயற் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாணவர்களைச் சந்தித்து அவர்கள் மத்தியில் கருத்துரை வழங்கவுள்ளதாக விஞ்ஞான தொழில்நுட்ப சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

எதிர்வரும் 22ஆம் திகதி மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இலங்கை விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், துறைசார் வல்லுநர்களுக்கான செயலமர்விலும் இவர் கலந்து கொள்ள விருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் 23 ஆம் திகதி யாழ்ப் பாணத்துக்கு வரும் அப்துல் கலாம் யா.இந்துக் கல்லூரி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு செல்லவுள்ளார். யாழ்.வரும் அவர் 400 மாணவர்களை சந்திக்கவுள்ளார். (எ-5)

## ஆசிரியர்களின் இடமாற்றம...

வழங்கப்படுவதற்கான காரணம் சகல மாணவர்களுக்கும் சமனான கல்வி கிடைக்கவேண்டும் என்பதற்காகவே.

ஆனால் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக பத்திரிகைகள் அதிக விமர்சனங்களை செய்து வருகின்றன.

ஆசிரியருக்கான இடமாற்றம் நன்கு திட்டமிடப்பட்டு ஆராய்ந்த பின்புதான் வழங்கப்படுகின்றது.

இதற்கென இடமாற்ற சபைகள் செயற்பட்டு வருகின்றன.

மாவட்ட இடமாற்ற சபையானது பொருத்தமான வயதெல்லை, தனிப்பட்ட பிரச்சினைகள், உடல் சார் பிரச்சினைகள் எனப் பல விடயங்களை ஆராய்ந்து ஆசிரிய இடமாற்றத்திற்குரியவர்களை இனங்காணும். இதனை இரண்டாவது இடமாற்ற சபையும் ஆராயும்.

அதன்பின்னர் இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

இவ்வாறு வெளியிடப்பட்டு இரண்டு கிழமைக்குள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மேன்முறையீடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

மேன்முறையீடு ஆராயப்பட்ட பின் வெளியிடப்படும் ஆசிரியர் இடமாற்றம் இறுதியானதாக இருக்கும்.

இந்த இடமாற்றம் எக்காரணம் கொண்டும் இரத்துச் செய்யப்பட மாட்டாது.

இவ்வாறு இடமாற்றம் கிடைத்த ஆசிரியர்கள் உரிய பாடசாலையில் 2 கிழமைக்குள் கடமையைப் பொறுப்பேற்கத் தவறினால் அவர்களின் சம்பளம் நிறுத்தப்படும்.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆசிரியர்களுக்கான இடமாற்றம் வழங்கப்படும்

எதிர்காலத்தில் நன்கு தேகாரோக்கியத்துடன் உள்ள இளம் ஆண் ஆசிரியர்களை வெளி மாவட்டத்திற்கு இடமாற்றுவது எனவும் பெண் ஆசிரியர்களை அவர்களது சொந்த மாவட்டத்திற்குள்ளேயே இடமாற்றம் செய்வது எனவும் திட்டமிட்டு வருகின்றோம். இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றோம்.

இதுதவிர வடக்கு மாகாணத்தில் 196 பாடசாலைகள் 50 மாணவர்களுக்கும் குறைவான மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்தி அதிக மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் எதிர்வரும்25 ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது.

வட மாகாணத்தில் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் 125 பாடசாலைகள் எந்தவிதத் தடையும் இன்றி தெரிவு செய்யப்பட்டுள்ளது. கூடிய விரைவில் இந்தப் பாடசாலைகளுக்கான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளது என்றும் ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி மேலும் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கருத்துரை வழங்கினர். (ச-6)


பொருளியல்

A/L 2012, Day, 2013, 2014

M.C. சுதாகரன் B.Com (Hons), Dip. in Edu.

யாழ். மாவட்ட ரீதியில் என்னிடம் பொருளியலை ஒரு பாடமாக கற்று சாதனை புரிந்த மாணவர்கள் (கடந்த சில வருடங்களில் முதல் 10இனுள்)

| | | | |
|---|---|---|---|
| 2006 இல் | 1ம் நிலை | திருக்குமரன் | (விக்கினேஸ்வரக் கல்லூரி) |
| 2007 இல் | 3ம் நிலை | திருமகன் | (ஹாட்லிக் கல்லூரி) |
| 2008 இல் | 2ம் நிலை | செல்வரூபன் | (J/N.M.M.V) |
| 2009 இல் | 4ம் நிலை | மிதிலா | (சாவகச்சேரி இந்து) |
| | 5ம் நிலை | சு.தேவகி | (சண்டிலிப்பாய் இந்து) |
| 2010 இல் | 1ம் நிலை | பி. ராஜாராம் | (ஹாட்லிக் கல்லூரி) |
| | 6ம் நிலை | அ.கோகுலன் | (J/N.M.M.V) |
| | 7ம் நிலை | வி.விஜிதா | (வட இந்து) |
| | 8ம் நிலை | லிதர்சினி | (அருணோதயா கல்லூரி) |
| 2011 இல் | 1ம் நிலை | கு.நிரூபிகா | (வேம்படி மகளிர்) |
| | 2ம் நிலை | செ.கோகிலா | (வட இந்து) |
| | 8ம் நிலை | சி.ஆராதனா | (வட மத்திய மகளிர்) |
| | 10ம் நிலை | வி.ரகுராம் | (வேலாயுதம் மகா வித்தியாலயம்) |
| 2012 இல் | ............ | ............................................ | |
| | ............ | ............................................ | |

♦ A/L 2011 பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களை (61பேர் - 36A) மனதார வாழ்த்துகின்றேன்.

♦ நீங்களும் சிறந்த பெறுபேறு பெற பின்வரும் கல்வி நிறுவனங்களில் எனது வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

⇨ MODERN - நெல்லியடி ⇨ MODERN - பருத்தித்துறை

⇨ விக்னா - யாழ்ப்பாணம் ⇨ ஞானோதயா அக்கடமி - சாவகச்சேரி

⇨ C.C.A - சுன்னாகம் ⇨ புகழ் - சுதுமலை

⇨ உயர் கணக்கியல் கல்லூரி - சித்தன்கேணி

(C-5598)

♦ நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெறலாம்.

எவ் வழி நல்வழியோ அவ்வழியே உன் வழி



A1 Exam
Sponsor/Settlement Visa

திருமணம் செய்து UK செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

City & Guilds Approved Centre

DMI COMPUTER EDUCATION

# City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
# சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
# சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீளளிக்கப்படும்.

Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது

IELTS | B1-Exam City & Guilds

A/L, O/L பரீட்சை எழுதியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச விரும்புபவர்களுக்கானது Spoken English

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம்: No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403

நெல்லியடி: M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470



ஆங்கிலம் விற்பனைப்பொருள் இல்லை

MyWay மாணவர்களை விட சரளமாக கதைக்க அல்லது எழுத வேறு தனியார் கல்விநிறுவன மாணவர்களால் முடியுமாய் இருப்பின் முதல் நபருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் (தை 31 வரை)

மாணவர் பயிற்சியில் சேர்ந்த திகதி, பயிற்சிபெற்ற காலம், சேர்ந்து பயிற்சி பெற்ற மாணவர் விபரத்துடன் எந்தவொரு தனியார் கல்வி நிறுவனமும் மாணவரை போட்டிக்கு அனுப்பலாம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் (21.02.2012)

NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி காலை 8.00 - 9.00

நகரசபை அருகில், ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி 10.00 - 11.00

182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் காலை 2.00 - 3.00

இலங்கை வங்கி மேல்மாடி, சங்கானை 4.00 - 6.00

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505



31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

பிறப்பு 13 . 03 . 1965



இறப்பு 21 . 12 . 2011

சண்முகநாதன் மனோரஞ்சன் (ஜேர்மனி)

அன்னை முகந்தனைப் பாராமல்
மனோகரா எங்கே நீ சென்றாயோ?
எண்ணம் செயல் தனில்
எம் செல்வா உந்தன் நினைவுகளே!
உள்ளம் தனில் நிழல் படம்
உந்தன் முகமல்லோ
உன் அன்னை படும் பாட்டை
அறிந்திடாயோ மனோகரா?

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி அறிந்து தொலைபேசி மூலமும், நேரிலும் எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மானிப்பாய் வீதி, தாவடி. தகவல் : குடும்பத்தினர்.

(சி-5601)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.